# உருளைக்கிழங்கு, வெங்காயத் தோட்டங்கள் முற்றாக நாசம்


Registered as a News paper in Ceylon   விலை சதம் 15

★ ★

ஈழநாடு சந்தா

தினப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ. 18-00
ஆறு மாதம் — ரூ. 34-00
ஒருவருடம் — ரூ. 66-0(

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் 49
போன்: 389

மலர் 11
இதழ்: 323
தேசிய தினசரி

ஈழநாடு சந்தா
வாரப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ. 4-00
ஆறு மாதம் — ரூ. 7-50
ஒரு வருடம் — ரூ. 14-00
முற்பணம் கட்ட வேண்டும்
தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

யாழ்ப்பாணம்   மார்கழி 18   ஷவ்வால் 23   வெள்ளிக்கிழமை   [2-1-70]


யாழ்ப்பாணம், வெள்ளி தொடர்ந்துபெய்துவரும் கடும் மழை காரணமாக யாழ்ப்பாணத்திலுள்ளபல உப உணவுத் தோட்டங்களும் நாசமாகியுள்ளன.

உருளைக்கிழங்கு, சின்ன வெங்காயங்கள் பயிரிடப்பட்ட தோட்டங்கள் மூற்ருக நாசமாகியுள்ளன இதனால் உபஉணவுப் பயிர்கள் யாவும் சேதமடைந்துள்ளன

மீண்டும் விதைகிழங்கு விதை வெங்காயம் கொடுத்தாலன்றி, தோட்டங்களில் கிழங்கு வெங்காயம் பயிரிட முடியாதநிலை விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ளது

## 1969-ம் ஆண்டில் சிறப்புவாய்ந்த பெண்யார்?

நியூயோர்க், ஜனவரி1 1969-ம்ஆண்டுபெண்களுக்கிடையில்அதிகசிறப்புடையவர் யார்என்பது பற்றிஅமெரிக்காவில்ஒரு நிறுவனம் நடத்திய கணிப்பில் இந்திய பிரதமர் திருமதி இந்திரா காந்தி இரண்டாம் இடம் வகிக்கிருர்.

திருமதி ஐஸன்ஹோவர் முதல் இடத்தையும் திருமதி நிக்ஸன் மூன்ரும்இடத்தையும் பிரிட்டிஷ் எலிஸபெத்ராணி ஒன்பதாம்இடத்தையும் வகிக்கிருர்கள். கடந்த 22ஆண்டுகளாக இந்தக் கணிப்பு இடம்பெற்று வருகின்றது.

## யாழ்ப்பாணத்துக்கு வெள்ள நிவாரணம்

யாழ்ப்பாணம், வெள்ளி கடும் மழை காரணத்தால் வீடுகளை விட்டு வெளியேறியவர்களுக்கு உணவுப் பொருட்கள் வழங்கப்படுமென்றும், உழைப்பு இழந்தவர்களுக்கு பண உதவி வழங்கப்படுமென்றும் யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் திரு. பிரான்சிஸ் பீட்டர்ஸ் அறிவித்துள்ளார்.

வெள்ள அபாய நிலைமை பற்றித் தன்னைச் சந்தித்துப் பெசிய தமிழரசுக்கட்சிப் பொதுச்செயலாளரான திரு. அ அமிர்தலிங்கம் எம். பி.யிடமே அரசாங்க அதிபர் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் ஒரு மாதத்திற்கு மேலாகப் பெய்த மழையால் பாதிக்கப்பட்ட சகல மக்களுக்கும் உடனடியாக நிவாரணம் வழங்க வேண்டிய அவசியத்தை திரு. அ. அமிர்தலிங்கம் எம். பி. அரசாங்க அதிபரைச் சந்தித்துப் எடுத்துக் கூறிஞர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் மாவுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் உடனடியாக போதிய மாவு அனுப்பிவைக்குமாறு சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினமும், திரு. அ. அமிர்தலிங்கம் எம். பி. யும் உணவுக் கமிஷனருக்கு அவசர தந்தி அனுப்பிவைத்துள்ளனர்.

(கா. நி.)

## 75,000 ரூபா பெறுமதியான பாலம் உடைந்தது

யாழ்ப்பாணம், வெள்ளி வட்டக்கச்சியில் 75 ஆயிரம் ரூபா செலவில் கட்டப்பட்ட பண்ணத்தாண்டிப் பாலம் வெள்ளத்திஞல் அள்ளிச் செல்லப்பட்டுவிட்டது.

1967-ம் ஆண்டு வெள்ளத்தின் பின்னரே இப் பாலம் கட்டப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும். இதஞல் வட்டக்கச்சி, இராமஞதபுரம், போக்குவரத்து கடந்த இரண்டு தினங்களாகத் துண்டிக்கப்பட்டிருந்தது.

நேற்று முதல் கடற்படைப் படகுகள் இங்கு சேவைக்கு விடப்பட்டுள்ளன.

நேற்று முன் தினம் இரண்டு அடி 10 அங்குலம் நீர்மட்டத்துக்கு மேல் தண்ணீர் நின்ற இரணைமடு நேற்றுக் காலை 9 மணிக்கு இரண்டு அடி 2 அங்குலமாக இருந்தது

கா. நி.)

# வெள்ள நிவாரணத்துக்கு மேற்கு ஜேர்மனி, அமெரிக்கா உதவி

## மீனவர் சடலம் கடலில் மிதந்தது

### வடபகுதி வெள்ள நிலைமை

யாழ்ப்பாணம், வெளளி கிளிநொச்சி, கரைச்சிப் பகுதியில் வெள்ளத்திஞல் வீடு இழந்து தவிக்கின்றன 500 குடும்பங்கள். இக்குடும்பங்களுக்கு நிவாரணம் அளிக்க உடன் விரைந்து சென்றது சமூக சேவைப் பகுதி.

சென்ற சில தினங்களாக தொடர்ந்து பெய்துவரும் மழை காரணமாக ஆனையிறவு, இரணைமடு, விஸ்வமடு குளங்களும் மற்றும் குளங்களும் வெளளத்தால் நிரம்பி வழிகின்றன. ஆனையிறவுப் பாலம் நீர் நிரம்பியதால் வீதிக்கு மேலாக நீர் பாய்கிறது. இதஞல் போக்குவரத்துப் பாதிக்கப்பட்டுள்ளது. இக்குளங்களுக்கு அருகாமையில் உள்ள தருமபுரம், புத்துவக்கொட்டி, முரசுமோட்டை போன்ற பகுதியில் வெளளப் பெருக்கு ஏற்படும் என்ற காரணத்தால் அங்குள்ள வாலிபர்கள் சிரமதானமூலம் வெள்ள வாய்க்கால்களைச் சீரமைத்து வருகின்றனர்

நேற்று வள்ளத்தில் மீன் பிடிக்கச் சென்ற கரையூரைச் சேர்ந்த மூவரில் ஒருவர் கடலில் மூழ்கி இறந்ததாகவும் அவரது சடலம் நேற்று மிதக்கக் கண்டுபிடிக்கப்பட்டதெனவும் தெரிவிக்கப்பட்டது

கிளிநொச்சிப் பகுதியிலுள்ள இராமநாதபுரம், முரசுமோட்டை, சிவநகர், தட்டென்செப்புஆகியஇடங்களிலிருந்துசுமார் 250குடும்பங்கள் வெளியேறியுள்ளன.

கிளிநொச்சி எம். பி. திரு. கா. பொ. இரத்தினமும், நிவாரண வேலைக்கென அரசாங்க அதிபரால் நியமிக்...

இக்கூட்டத்தில் தீவுப்பகுதி காரியாதிகாரி, பயிர்ச்செய்கைக்குழுவினர், தீவுப்பகுதி எம் பி. திரு. நவரத்தினம் உட்பட பலர் இதில்கலந்து கொண்டு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றி ஆராய்ந்தனர்.

எதிர்வரும் பொதுத்தேர்தலில் தீவுப்பகுதியில்போட்டியிடவிருக்கும் வழக்கறிஞர் திரு.ப. கதிரவேலு, புங்குடுதீவு மற்றும் ஊர்காவற்றுறைப் பகுதிகளுக்கு நேரில் சென்று பார்வையிட்டார். சரவணை. சின்னமடுப்பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பாண், சீனி முதலியவற்றை அவர் வழங்கிஞர்

### நெற்பயிருக்கு சேதமில்லை

அராலி, வெளளி ...

## தென்னிலங்கை நிலைமையை பிரதமர் நேரில் பார்த்தார்

### 1957 க்குப்பின் ஏற்பட்ட மோசமான வெள்ளம்

### செஞ்சிலுவைச்சங்கம் அதிகாரியை அனுப்பியுள்ளது

கோட்டை, வியாழன்

நாட்டில் பரவலாகத் தொடர்ந்து பெய்துவரும் மழை காரணமாக இப்போது பல இடங்களில் ஏற்பட்டுள்ள பெருவெள்ளம் 1957ம் ஆண்டில் ஏற்பட்ட பெருவெள்ளத்துக்குப் பின்னர் ஏற்பட்ட மிக மோசமான வெள்ளப்பெருக்கு என சமூக சேவைப் பகுதியினர் கருத்துத் தெரிவித்துள்ளனர்

### மட்டக்களப்புக்கு ரூ $2\frac{1}{2}$ லட்சம் உதவி

பெருவெள்ளம் ஏற்பட்ட சில பகுதிகளில் வெள்ளம் வடியத்தொடங்கியிருப்பதாக சமூகசேவைப்பகுதியினர் தெரிவித்தனர். ஆனாலும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகள் பலவற்றிலும் இன்னும் போக்குவரத்துச [illegible]கவில்லை. வெள்ளத்திஞல்

## நெற் செய்கை சேதம்

யாழ்ப்பாணம், வெள்ளி யாழ்ப்பாணப் பகுதியிலுள்ள 80,000 ஏக்கர் நெற்செய்கையில், வெள்ளத்திஞல் இதுவரை சுமார் 300 ஏக்கர் சேதமடைந்திருப்பதாக விவசாயப் பகுதி உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார்.

ஊர்காவற்றுறை வடமராட்சிப் பகுதிகளில் வெங்காயச் செய்கை பாதிக்கப்பட்டன. காலஞ்சென்று நட்ட உருளைக்கிழங்கும் வெள்ளத்தால் அழுகிவிட்டது.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் 3 மாத பயிர்ச்செய்கை முற்ருகப் பாதிக்கப்பட்டுவிட்டது. 'ஏச்-4' விளைச்சலிலிருந்து நல்ல பலன் கிடைக்குமெனக் கமக்காரர்கள் எதிர்பார்க்கின்றனர்.

தொடர்ந்து மழைபெய்யுமாஞல் கமக்காரர்கள்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பாய்கிறது. இதனால் போக்குவரத்துப் பாதிக்கப்பட்டுள்ளது. இக்குளங்களுக்கு அருகாமையில் உள்ள தருமபுரம், புத்துவக்கொட்டி, முரசுமோட்டை போன்ற மற்றும் பல பகுதிகளில் உள்ள மக்கள் தமது வீடுகளையிழந்து தவிக்கின்றனர். வீடின்றித் தவிக்கும் 500க்கு மதிகமான குடும்பங்களைச் சேர்ந்த சிறுவர்களும் குழந்தைகளும் வீடிழந்து தவிக்கும் பெற்றோருடன் சேர்ந்து பரிதவிக்கும் காட்சி பார்ப்போர் உள்ளத்தை உருக்குவதாயிருந்தது.

யாழ் அரசாங்க அதிபர் திரு. பிரான்சிஸ் பீட்டர்ஸ் சமூகசேவைப்பகுதி உதவி அதிபர் திரு என், சிவசிதம்பரம் ஆகியோர் காரைநகர் இராணுவத்தினரிடம் - வள்ளங்கள் பெற்று மேற்படி குடும்பங்களை வெள்ளத்திலிருந்து மீட்டு. அவர்களுக்கு தங்குமிடமும் மற்றும் உணவு முதலிய உதவிகளும் அளித்துவருகின்றனர்:

யாழ் மாவட்டக் காரியாதிகாரி திரு ஏச் ஈ புள்ளைநாயகமும் கடல்தொழிலாளரிடம் வள்ளங்கள் பெற்று மேற்படி குடும்பங்களைமீட்க நடவடிக்கை எடுத்துள்ளார்

பல ஆயிரம் ஏக்கர் காலபோக விளைச்சல் பெருமளவில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருப்பதாகவும், விவசாயப்படை முகாம்வீரர்களின் பயிர்களையும் வெள்ளம் அழித்துள்ளதாகவும் தெரியவருகிறது.

யாழ்ப்பாணப் பகுதியில் பெருமழை பெய்தபோதிலும் தொடர்ந்தும் மழை பெய்து வெள்ள அபாயம் ஏற்படுமோ என அஞ்சப்படுகிறது கோண்டாவில், நந்தாவில் குளங்கள் நிரம்பி நீர் பாய்வதால் அதற்கு அருகிலுள்ள குடும்பங்கள் வெளியேறியுளளன வலி-கிழக் கிலிருந்துசுமார் 250குடும்பங்கள் வெளியேறியுள்ளன.

கிளிநொச்சி எம். பி. திரு. கா. பொ. இரத்தினமும், நிவாரண வேலைக்கென அரசாங்க அதிபரால் நியமிக்கப்பட்ட விசேஷ பிரதிநிதி காணி அபிவிருத்தி உத்தியோகஸ்தர் திரு. எஸ். பொன்னம்பலமும் இந்த இடங்களைச்சென்று பார்வையிட்டனர்.

துணுக்காய் காரியாதிகாரி திரு. தம்பிமுத்து, பூநகரி காரியாதிகாரி திரு. இராசரத்தினம், பளைக்காரியாதிகாரி திரு.அருணசலம் ஆகியோர் தம் பகுதி நிவாரண வேலைகளை துரிதமாக மேற்கொண்டுள்ளனர்.

பளையில் கச்சாய்வெளி, கிளாலி ஆகிய இடங்களும், பூநகரியில் பல சிறுகிராமங்களும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. (கா. நி.)

## தீவுப்பகுதி எம் பி. நடவடிக்கை

மண்டைதீவு வெள்ளி

தீவுப்பகுதியில் பெரும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதனால் நூற்றுக்கணக்கானோர் வீடிழந்து இருப்பிடமின்றி அவதியுறுகின்றனர் கடல் கொந்தளிப்பு ஏற்பட்டுள்ளதால் கடற்றொழிலாளர் தொழிலை நிறுத்தியுள்ளனர். பயிர்கள் பெரும் அழிவுக்குள்ளாகியுள்ளது. வெங்காயச்செய்கை சரவணை, நாரந்தனை, கரம்பன் போன்ற இடங்களில் பெருமளவு பாதித்துள்ளது.

இதுசம்பந்தமாக தீவுப்பகுதி எம் பி. திரு. வ. நவரத்தினம், யாழ். அரசாங்கஅதிபருடன் தொடர்புகொண்டு உடனடி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொண்டதற்கிணங்க யாழ். அரசாங்க அதிபர் காரியாலயத்தில் ஓர் அவசர ஆலோசனைக் கூட்டம் கூட்டப்பட்டது.

சீனி முதலியவற்றை அவர் வழங்கினார்

## நெற்பயிருக்கு சேதமில்லை

அராலி, வெள்ளி

அராலி - வட்டுக்கோட்டைப்பகுதியில் மழையினால் மக்கள் வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. அராலிக் கிராமத்தில் வழிப்பாதைகள் வெள்ளத்தால் மூடப்பட்டுள்ளன. கால்நடைகளே இங்கு பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. உணவுமின்றி படுத்துறங்க வசதியுமின்றிக் கால்நடைகள் தவிக்கின்றன.

அராலி கி: ச. அதிகாரிகளும் பயிர்ச் செய்கைக்குழு நிர்வாகிகளும் வீதிகள் தோறும் சென்று நீரோட்டத் தடைகளை நீக்கி வெள்ளத்தை கடலுக்கு ஓடச் செய்கிறார்கள். அதிர்ஷ்டவசமாக மக்கள் வீடுகளை விட்டு இடம்பெயரும் நிலை ஏற்படவில்லை நெல் வயல்களுக்கும் சேதம் ஏற்படவில்லை.

## இன்று

யாழ்ப்பாணம், வெள்ளி

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலயத்திய் சுக்கிரவாரமாகிய இன்று மாலை 6 மணி முதல் இரவு 7 மணி வரை வித்துவான் க. கி. நடராஜனால் பெரிய புராண பிரசங்கம் நடத்தப்படும் இரவு 7மணிக்கு சுக்கிரவார அம்மன் பூஜை நிகழும்.

0 0 0

காரைநகர், வெள்ளி

காரைநகர் சிவன்கோவில் வீதியிலுள்ள சிவஆச்சிரமத்தில் இன்று பகல் 1-30மணிக்கு ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக பரமாச்சாரியசுவாமிகள் 'திருவாசகத்தே' என்றும் பொருள்பற்றி உரை நிகழ்த்துவார்.

# மட்டக்களப்புக்கு ரூ $2\frac{1}{2}$ லட்சம் உதவி

பெருவெள்ளம் ஏற்பட்ட சில பகுதிகளில் வெள்ளம் வடியத்தொடங்கியிருப்பதாக சமூக சேவைப்பகுதியினர் தெரிவித்தனர். ஆனாலும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகள் பலவற்றிலும் இன்னும் போக்குவரத்துச சீராகவில்லை. வெள்ளத்தினால் சூழப்பட்டு வெளியேற முடியாத நிலையில் சில இடங்களில் சிக்கித் தவிக்கும் மக்களை மீட்பதற்கு எடுத்துக் கொண்ட முயற்சிகள் பயனளிக்கவில்லை. இவ்விதம் அகப்பட்டுள்ளவர்களில் பலர் உடவளவைத் திட்டத்திலும் அம்பாறைப் பகுதியிலுமுள்ளவர்களாகும். அவர்களுக்கு விமான மூலம் உணவுப் பொட்டலங்கள் விநியோகிக்கப்படுகின்றன. வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண உதவி வழங்குவதற்கென சமூகசேவை இலாகா ஐந்து லட்சம் ரூபாய் வழங்கியுள்ளது. இதில் மிகக் கூடுதலான தொகையாக இரண்டரை லட்சம் ரூபாய் மட்டக்களப்பு மாவட்டத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்தத் தகவலை சமூகசேவை இலாகா அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகள் அளிக்கும் வேலை துரிதப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# மேற்கு ஜெர்மனி ரூ 50,000 உதவி

இலங்கையின் வெள்ளப் பெருக்கினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுககு உதவியாக மேற்கு ஜெர்மன் அரசாங்கம் இலங்கை அரசாங்கத்துக்கு ஐம்பதினாயிரம் ரூபாய் வழங்கியுள்ளது. அமெரிக்க அரசாங்கமும் இலங்கைக்கு உதவியளிக்க முன்வந்துள்ளது.

இலங்கையில் ஏற்பட்டுள்ள வெள்ளச் சேதம் பற்றி நேரில் ஆராயவும் உதவிகள் வழங்குவதுபற்றிக் கணிக்கவும் ஜெனிவாவிலுள்ள சர்வதேச செஞ்சிலுவைச்சங்கத் தலைமைக் காரியாலய அதிகாரி கிங்ஸ்லி சிவரத்தினம் விசேஷமாக இலங்கைக்கு வந்துள்ளார். இதேசமயம் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு அளிப்பதற்கென 42பெட்டிகள் கொண்ட உடுதுணிகளை உடனடியாக இலங்கைக்கு அனுப்பி வைக்குமாறு சிங்கப்பூர் செஞ்சிலுவைச் சங்கக் கிளைக்கு ஜெனிவா தலைமைக் காரியாலயம் அறிவித்துள்ளது.

இலங்கையில் செஞ்சிலுவைச்சங்கம், அகில இலங்கை பௌத்த காங்கிரஸ், இரட்சணியசேனை மற்றும் பொது ஸ்தாபனங்கள சிலவும் வெளளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவியளிப்பதில் ஈடுபட்டுளளன. செஞ்சிலுவைச்சங்கக் கோஷ்டியொன்று இன்று காலை உணவுப் பொருளகளுடன் மாத்தறைக்குப் போய்ச் சேர்ந்தது.

(4-ம் பக்கம் பார்க்க)

ஊர்காவற்றுறை சுமார் 500 ஏக்கர் சேதமடைந்திருப்பதாக விவசாயப் பகுதி உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார்.

ஊர்காவற்றுறை வடமராட்சிப் பகுதிகளில் வெங்காயச் செய்கை பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

ஊர்காவற்றுறைப் பகுதியில் சுமார் 100 ஏக்கரிலும், வடமராட்சிப் பகுதியில் உள்ள 460 ஏக்கரில் சுமார் 50 ஏக்கரிலும் வெங்காயச் செய்கை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறது.

வடபகுதியில் 1360 ஏக்கர் உருளைக்கிழங்குச் செய்கையில் சுமார் 100 ஏக்கர் கிழங்குகள் அழுகிவிட்டன. கறையான், குறவளையன் போன்றவற்றிற்கெதிராக அல்றின் பாவிக்காத கமக்காரர்களின் பயிர்கள் பூச்சியால் அரிக்கப்பட்டுள்ளன. இதைத்தொடர்ந்து பெய்த மழையினால் இப்பயிர்கள் முற்றாகச் சேதமடைந்துவிட்டில் 3 மாதப் பயிர்ச்செய்கை முற்றாகப் பாதிக்கப்பட்டுவிட்டது. 'ஏச்-4' விளைச்சலிலிருந்து நல்ல பலன் கிடைக்குமெனக் கமக்காரர்கள் எதிர்பார்க்கின்றனர்.

தொடர்ந்து மழைபெய்யுமானால் கமக்காரர்கள் மேலும் பாதிக்கப்படுவர்.

## அரசாங்க ஊழியர் லீவு ரத்து

கோட்டை, வெள்ளி

மாத்தறையிலுள்ள சகல அரசாங்க சேவை ஊழியர்களது லீவுகளும் உடனடியாக ரத்துச்செய்யப்பட்டுள்ளதாக பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் நிரந்தரக்காரியதரிசி அறிவித்தல் செய்துள்ளார்.

யாழ்ப்பாணம், வெள்ளி

கன்னாதிட்டி வீதியில் நேற்று மாலை நடைபெற்ற கார் சைக்கிள் விபத்தொன்றில்கரீம்என்பவர் (54வயது) படுகாயமுற்று யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்

(கா. நி.)

# பல ஆயிரம்ரூபா பயிர் நாசம்

மாவிட்டபுரம். வியாழன்

வலி-வடக்குப் பகுதியில் தொடர்ந்து பெய்துவரும் மழையால் பல இடங்களில் வெள்ளம் நிரம்பியுள்ளதுடன் பல ஆயிரம் ரூபா பெறுமதியான பயிர்கள் நாசமாகியுள்ளன.

காலபோக வெங்காயம் பயிரிடப்பட்டுள்ள பல ஏக்கர் தோட்டங்களில் வெள்ளம் நிரம்பியுள்ளதால் இம்முறை காலபோக வெங்காயம் பாதிக்கப்பட்டுள்ளதென தெரிவிக்கப்படுகிறது.

காங்கேசன்துறை, தெல்லிப்பழை அளவெட்டி, மாவிட்டபுரம், அம்பனை, கொல்லங்கலட்டி, கீரிமலை ஆகிய பகுதிகளில் தொடர்ந்து பெய்துவரும் மழை காரணமாகப் பெரும் அளவில் பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன் மேலும் அபாயமும் ஏற்படலாம் என மக்கள அஞ்சுகின்றனர்.

இப்பகுதிகளிலுளள பல கிணறுகளில் நீர் நிரம்பி வழிகின்றது.

போக்குவரத்து வீதிகள் மழை காரணமாக சீரில்லாமல் இருப்பதால் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. தொலைபேசித்தொடர்புகளும் சேவைகளும் சிறிதளவு பாதிக்கப்பட்டுள்ளன கடற்கொந்தளிப்பு அதிகமாகவுள்ளதால் மீனவர்கள் கடலுக்குச் செல்லவில்லை.

## மீன் சந்தைக்கு எதிர்ப்பு

சுழிபுரம், வெள்ளி

தொல்புரம் பாணுவெட்டியில் மீன்சந்தை நடாத்த சுழிபுரம் கிராமசபையினர் அனுமதி வழங்கியதை எதிர்த்து இப்பகுதி மக்கள் பலர் உள்ளூராட்சி அமைச்சருக்கு தந்தி அனுப்பிவைத்துள்ளனர்.

பெரும்பாலும் மாமிசம் சாப்பிடாத மக்கள் வசியும் இவ்விடத்தில் மீன் சந்தை வேண்டாம் என அத்தந்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தள்ளாடிமுகாம் இராணுவத்தினர் வேறுஇடத்துக்கு மாற்றப்படுவர்

## மன்னாரில் பொலிஸ் சேவை அதிகரிப்பு

யாழ்ப்பாணம், வெள்ளி

மன்னாரில் அண்மையில் நடைபெற்ற அசம்பாவித சம்பவங்களை தொடர்ந்து தள்ளாடி இராணுவ முகாமிலுள்ள சகல இராணுவத்தினரும் அங்கிருந்து விரைவில் இடமாற்றம் செய்யப்படலாம் என்று நம்பகரமாகத் தெரியவந்துள்ளது.

இதுசம்பந்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ள இராணுவத் தளபதி திரு சேபால அட்டிகலை மீண்டும் இன்று அல்லது நாளை மன்னாருக்கு வரலாமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போது தள்ளாடியில் உள்ள இராணுவத்தினர் அங்கிருந்து இடமாற்றஞ் செய்யப்பட்டுப் பின்னர் புதிதாக நியமிக்கப்படுபவர்கள் 3, 4 பிரிவுகளாகக் கடமையாற்றுவார்களாம்.

மன்னார் வரும் இராணுவத் தளபதி, உயர்தர பொலிஸ் அதிகாரிகளுடனும் சில ஆலோசனைகளை மேற்கொள்வார். ஒரு வார காலம் ரோந்து சுற்றாமல் இருந்த தள்ளாடி இராணுவத்தினர் மீண்டும் ரோந்து சுற்றும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

மன்னாரில் நதிக்குடாக் கடற்கரைப் பகுதி மீன்வாடிகளுக்குள்ளிருந்த கடற்றொழிலாளர் இராணுவத்தினரால் தாக்கப்பட்டதாகவும், மன்னாரில் கல்லடியில் கடற்றொழிலாளர் ஒருவரைத் தாக்கிப் பணம் பறித்ததாகவும் கடந்த இரண்டு தினங்களுக்குள் கிடைத்த புகார்களை தொடர்ந்து மன்னாருக்கு வரும் திரு. சேபால அட்டிகலை இதுசம்பந்தமாகவும் பூரண விசாரணை நடத்துவார்.

வங்காலையிலும், தாழ்வுப்பாடியிலும் நிறுவப்பட்ட தற்காலிக பொலிஸ் நிலையங்கள் தொடர்ந்திருக்குமென யாழ்ப்பாணபொலிஸ் தலைமைக் காரியாலய உயர் அதிகாரி ஒருவர் சொன்னார். மன்னார்ப் பொலிஸார் அசம்பாவிதம் எதுவும் ஏற்படாமல் தொடர்ந்து நிலைமையைக் கண்காணித்து வருகின்றனர். மன்னாரில் பொலிஸாரின் தொகையையும் அதிகரிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகின்றன. கா. நி.

விற்பனையாகின்றது!

1970

"ஈழநாடு" தினக் குறிப்பு

விலை: ரூ. 1-35 சதம்

"ஈழநாடு" Pocket Diary

விலை: -75 சதம்

ஏராளமான தகவல்கள்!

எமது பத்திரிகை விற்பனையாளர்களிடம்

பெற்றுக்கொள்ளலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரிவிளம்பரம்

### கல்வி

1-ம் வகுப்பிலிருந்து 8-ம் வகுப்பு வரை தரம் வாய்ந்த ஆசிரியையால் சகல பாடங்களும் 1-1-70ல் இருந்து கற்பிக்கப்படும். விபரங்கட்கு: 107, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
1736

பொதுச் செளக்கியம் பயில்வோர் பயிற்சி வகுப்பு, ஆண் தாதிகள் பரீட்சை ஆகியவற்றிற்கான தமிழ்ப் பாஷை, பொது அறிவு, பொது விவேகம் ஆகியவற்றிற்கான வகுப்புகள் அனுபவம் வாய்ந்த இலங்கைப் பட்டதாரிகளால் நடாத்தப்படுகின்றன. உடன் சேரவும். வர்த்தகக்கல்லூரி, பருத்தித்துறை.
1747

### கல்வி

உலகில் ஆங்கிலச் சுருக்கெழுத்தில் கூடிய ஆசிரிய அனுபவம் உள்ளவராலும், இலங்கையில் தமிழ்ச் சுருக்கெழுத்தின் முன்னோடியாலும், 48 வருட வர்த்தக அனுபவமுள்ள ஆசிரியராலும் சுருக்கெழுத்து, தட்டச்சு, கணக்கியல், வர்த்தகம், வர்த்தக எண்கணிதம், தமிழ்/ஆங்கில மொழிமூலம் கற்பிக்கப்படுகின்றது. உடன் சேர்ந்து படிக்கவும். வர்த்தகக்கல்லூரி பருத்தித்துறை
1746

### விற்பனைக்கு

முல்லைத்தீவு மூன்றுங் கட்டையடியில், சிலாவத்தை கொக்கிளாய் றோட்டில் 70 ஏக்கர் தென்னந்தோட்டம் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு யா. பசுபதி, மாநகராட்சி மன்றம், யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.
1750

3 KV, 1 1/2 KV — 230 AC மின்சார இயந்திரங்கள் இரண்டு விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும். நா. சிவபாலமூர்த்தி, 8, அத்தியடி புது வீதி, யாழ்ப்பாணம். 1749

### விற்பனைக்கு

சொந்தப்பாவிப்பில் சிறந்த நிலையிலுள்ள EN 6000 தொடர்பிலக்க பேர்ஜோ 203 கார். ரூபா 18,000 மேல் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். கூட்டுறவு நெசவாளர் சமாஜம், மணிக்கூடு வீதி, யாழ்ப்பாணம்.
1748

### WANTED

Teachers
Wanted two Graduates teach Maths Physics and Biology, Chemistry upto G. C. E. Adv. Level. Apply with Terms. Registrar, Science Academy, Raja Villa, Ooriccadu, Valvettiturai.
1745

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### வெள்ளி 2—1—70

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.
காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற்சிந்தனை, 6-30 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 பண்ணுரிந்தமிழ், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம் நிகழ்ச்சி, 8-15 இஸ்லாமிய கீதம், 8-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 49 மீ.
பகல் 12-00 செய்திச் சுருக்கம், 12-03 சித்திர கானம், 1-00 கதம்ப இசை, 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 61 மீ.
மாலை 4-25 செய்திச்சுருக்கம், 4-28 சங்கமம், 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்த தினவாழ்த்துக்கள், 5-15 மாணவர்மன்றம்.

இரவு 6-10 இடைவேளை இசை, 6-15 வாத்தியஇசை, 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 கிராமசஞ்சிகை, 7-15 கர்னாடகஇசை, 7-45 நாடகம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 உரையாடல், 10-00 நேயர்கேட்டவை, 10-30 செய்திச்சுருக்கம்.

ராணி (யாழ்ப்பாணம்) [தினசரி 4 காட்சிகள்]
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா
அசோகன் - சோ - சந்திரபாபு
நடித்த
அடிமைப்பெண்

## யாழ்ப்பாணக் கல்லூரி

### பட்டதாரிப் பகுதி

ஜி சி இ. (உயர்தரம்)
ஜனவரி 1969

1970-ம் ஆண்டு வகுப்பு (கலை விஞ்ஞானம்), 1971ஆம் ஆண்டு வகுப்பு (கலை விஞ்ஞானம்) விண்ணப்ப முடிவுதிகதி: 8-1-70. முத்திரை ஒட்டிய நீண்ட தபால் உறையை அனுப்பி விண்ணப்பப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்க.

பதிவாளர்.
வட்டுக்கோட்டை.
1462

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

## பிரசித்த ஏலவிற்பனை

### சந்தைக்கடைக் குத்தகை, பாஷையூர் - 1970

பாஷையூர் சந்தையிலிருக்கும் இரு கடைகள் 6-1-1970-ம் திகதி தொடக்கம் 31-12-1970-ம் திகதி வரையுள்ள காலத்திற்குக் குத்தகைக்குக் கொடுக்கப்படவிருப்பதால், இதற்கான குத்தகை உரிமை ஜனவரி மாதம் 5-ம் திகதி திங்கட்கிழமை (5-1-70) மு. ப. 11-30 மணியளவில், மேற் சொல்லப்பட்ட இடத்தில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

கூடிய கேள்விக்காரர் விற்பனை செய்யும் உத்தியோகத்தரிடம் முழுக் குத்தகைப் பணத்தையும் உடனடியாகக் கொடுக்கவேண்டும்.

மேற்கொண்டு தகவல்களை அலுவலக நேரத்தில் மாநகராட்சிமன்ற அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

ஏ. ரி. சுந்தரம்,
ஆணையாளர்,
யாழ். மாநகராட்சி மன்றம்.
மாநகராட்சி மன்ற அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
31-12-69. 1899

## சிறுவர் தினம்

பண்டத்தரிப்பு, வியா.
இளவாலை சென்ஜேம்ஸ் பங்கில் இன்று சிறுவர்தினம் கொண்டாடப்படுகிறது.

இதில் சிறுவருக்கான விளையாட்டுப் போட்டிகள் வளர்ந்தோருக்கான விளையாட்டுக்கள் வினோதஉடைப் போட்டி என்பனவும்பேச்சு பாட்டு, நாடகம் போன்ற கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறவிருக்கின்றன.

## ஆண்டு விழா

வெளிவந்துவிட்டது: ஸ்ரீலங்கா வெளியீடு:
O கல்வித்திணைக்களப் புவியியற் பாடத்திட்டத்தைத் தழுவி, இலகுவாயும் தெளிவாயும் மாணவர்கள் புரிந்து கொள்ளத்தக்க முறையில் வெளிவந்திருக்கும் —
ஏழாந்தரப் புவியியல்
O க. குணராசா, B. A. Hons(Cey) ஆக்கியது
O விலை ரூபா 3-00. O. V. P. P. கவனிக்கப்படும்.
ஸ்ரீ லங்கா வெளியீடு!
காங்கேசன்துறை வீதி, (1897) யாழ்ப்பாணம்.

ஆசிய ஆணழகன் போட்டியில்

# யாழ். வீரருக்கு மூன்றாவது இடம்

### மலேசியருக்கு முதலிடம்

யாழ்ப்பாணம், வெள்ளி
சமீபத்தில் கொழும்பு சுகததாசா உள் விளையாட்டரங்கில் நடைபெற்ற 'ஆசிய ஆணழகன்' போட்டியில்பலமுறை 'யாழ்ப்பாண ஆணழகனாகத் தெரிவு செய்யப்பட்ட வீரர் எம். ஏ. தியாகராசா இலங்கையின் சார்பில் கலந்து கொண்டு 'மூன்றாவது இடத்தைப்' பெற்றுக்கொண்டார்.

இவர் 1966-ம் ஆண்டில் 'இலங்கை ஆணழகனாக'வும், கடந்தமுறை நடைபெற்ற 'ஆசிய ஆணழகன்' போட்டியில் உயர்ந்த மனிதர் பிரிவில் முதலாவது இடத்தையும் பெற்றுக் கொண்டவர்.

இப்போட்டியில் மலேசியா நாட்டைச் சேர்ந்த வீரர் சலோமா எஸ்மாடோ என்பவர் 'ஆசிய ஆணழகனாக'வும், இரண்டாவது இடத்தை இலங்கை வீரரான றொபட் ரூபசிங்காவும் தட்டிக் கொண்டனர்.

இந்தப் போட்டியில் ஜப்பான், இந்தியா, மலேசியா சிங்கப்பூர், இலங்கை ஆகிய நாடுகளிலிருந்து பல வீரர்கள் கலந்து கொண்டார்கள்.

இம்முறை இலங்கையில் நடைபெற்ற இந்த ஆசிய ஆணழகன் போட்டிக்குவிளையாட்டமைச்சர் திரு சுகததாசா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு வெற்றி வீரர்களுக்கு பட்டமளித்து கெளரவித்தார்.

போட்டியில் வெற்றி பெற்ற வீரர்களின் விபரம் வருமாறு:

முதல் வகுப்பு:- சலோமா எஸ்மாடோ (மலேசியா), றொபட் ரூபசிங்கா (இலங்கை), எம். ஏ. தியாகராசா (இலங்கை).

இரண்டாம் வகுப்பு:- யோகியோ ஓசாவா (ஜப்பான்), பேஸ்ரி கெரானு(மலேசியா) ஜோசப் மாங் (சிங்கப்பூர்).

மூன்றாம் வகுப்பு:- பிட்டு வான் லேக்ட் (மலேசியா), அப்பிரின் சமாட்(மலேசியா) சாந்தி டியுடா (இந்தியா).
(தே. நி)

## யாழ். மாவட்ட ச. ச. நிலைய கரபந்தாட்டப் போட்டி

வேலணை, வியா
உள்ளூராட்சி வாரத்தை மிக விரிவாகக் கொண்டாடும்பொருட்டு யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களுக்கிடையில் நடைபெறும் கரபந்தாட்டப் போட்டி இம்மாதம் 4-ல் [illegible]ணை மத்திய மகாவித்தியாலய முன்றலில் நடைபெறவுள்ளது. அன்றைய தினம் பரவலாக ஏனைய இடங்களிலும் கரபந்தாட்டப் போட்டி நடைபெற்று அதன் பின் யாழ். மாவட்ட [illegible] யாழ். நகரமண்ட[illegible]

## ஒழுங்கைகள் விஸ்தரிப்பு

வட்டுக்கோட்டை, வியா.
வட்டுக்கோட்டைகிராமச் சங்க எல்லைக்குட்பட்ட சிவன்கோவிலடி கிராமத்திலுள்ள சிறிய ஒழுங்கைகள் சிரமதான மூலம் கிராம சபைத் தலைவர் திரு. நிற்சிங்கம் தலைமையில் விஸ்தரிக்கும் வேலைகள் நடைபெறுகின்றன. இப்பகுதி மக்கள் இச்சிரமதானத்தில் பெரும் அக்கறை [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இடமாற்றம்

யாழ்ப்பாணம், வெள்ளி
யாழ்ப்பாணம் மாநகர சபை வேலைப்பகுதியைச் சேர்ந்த சுப்பிரிண்டன் திரு கே. சிவசுந்தரம் இம்மாதம் முதல் கண்டி மாநகர சபைக்கு இடமாற்றம் பெற்றுச் செல்கிறார்.

0

மாங்குளம், வியாழன்
மாங்குளம் புகையிரத அதிகாரிகளான திரு. என். நவரெத்தினராசா, திரு. எஸ். சிவசோதி ஆகியவர்கள் முறையே சாவகச்சேரிக்கும் கும்பனித்தெருவுக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இவர்களின் இடத்துக்கு திரு. எஸ். நடராசாவும், திரு. சிதம்பரநாதனும் நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

0 0 0

மண்டைதீவு, வியா
அல்லைப்பிட்டிக் கிராம சபையின் பிரதம லிகிதராகக் கடமையாற்றிய திரு. எஸ். குணரத்தினம் மன்னார் மாவட்டத்திலுள்ள முருங்கன் கிராமசபையின் பிரதமலிகிதராக இம்மாதத்திலிருந்து மாற்றம்பெற்றுச் செல்கின்றார்.

முருங்கன் கிராமசபையின் பிரதமலிகிதரான திரு. க. திருஞானசம்பந்தன் இங்கு இடமாற்றலாகி வருகின்றார்.

## புதிய நிர்வாகிகள்

பண்டத்தரிப்பு, வியா.
யாழ் மேற்றிராசன சங்கத்தின் வருடாந்தபொதுக் கூட்டம் யாழ்ப்பாணம் சம்பத்திரிசியார் கல்லூரி மண்டபத்தில் மன்னார் எம். பி: திரு வீ. ஏ. அழகக்கோன் தலைமையில் நடைபெற்றபோது பின்வருவோர் புது வருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு. வீ. ஏ. அழகக்கோன், உபதலைவர்கள்: திருமதி அந்தோனியா சுவாமிநாதர், திரு எம். வி. ஆசீர்வாதம், திரு எம். ஜேக்கப், காரியதரிசி திரு எஸ் எம். ஜே. லூயிஸ்: உபகாரியதரிசி வித்துவான் எஸ். அடைக்கலமுத்து. [illegible] திரு எஸ். திருச்[illegible]



## அடிமைப்பெண்

'யோகி'

'செங்கோடனால் அடிமையாக்கப்பட்ட பெண்களின் காலில் மாட்டப்பட்டிருக்கும் அடிமைச் சங்கிலியை அறுத்தெறிந்த பின்னரே தனது காலில் மாட்டப்பட்டிருக்கும் சங்கிலியை அறுக்க வேண்டும்' என்ற தாயாரின் வேண்டுகோளை ஏற்று, எதிர்நோக்கிய பல கஷ்டங்களை எல்லாம் முறியடித்து, தனது நாட்டு மக்களுக்கு விடுதலை பெற்றுக்கொடுத்த ஒரு மாவீரனின் கதைதான் 'அடிமைப்பெண்'.

ஆங்கிலப் படங்களைப் பின்பற்றிப் பல காட்சிகள் பிரமாண்டமான முறையில் தயாரிக்கப்பட்டிருக்கின்றது வேங்கையனாக வரும் புரட்சி நடிகர் எம். ஜி. ஆர்., இப்படத்தின் கதை, வசனத்தை எழுதியிருக்கிறார். ஒவ்வொரு காட்சியும் விறுவிறுப்பாகவே செல்கிறது. வெளிப்புறக் காட்சிகள் மிகவும் கச்சிதமாகப் படமாக்கப்பட்டிருக்கின்றன, அடுத்தடுத்து எம். ஜி. ஆ. ரைச் சமூகப் படங்களில் பார்த்து வந்த ரசிகர்களுக்கு இது ஒரு நல்ல விருந்தாக அமைந்துள்ளது. பாடல்கள் [illegible]ருத்துள்ளவைகளாக இருக்கின்றன.

செங்கோடனாக வரும் அசோகன் வழக்கம் போல் தனது வீரதீரங்களைக் காட்டுகிறார். அரசனாக இருந்து நல்லாட்சி நடத்தவேண்டிய அவர், ஒரு பெண்ணைப் பழிவாங்குவதையே தனது வாழ்வின் இலட்சியமாகக் கொண்டு கடைசிவரை அதற்காக முயற்சியெடுத்து வருகிறார். மாவீரனாக வரும் எம். ஜி. ஆரின் புதுமாதிரி [illegible]

பாக அமைந்திருக்கிறது.

கே சங்கரின் டைரக்ஷனில் கண்ணைக்கவரும் கலரில் அதிக செலவில் உருவாகியுள்ள இப்படத்தின் இசையைகே வி மகாதேவன் அமைத்திருக்கிறார். இப்படத்தில் அறிஞர் அண்ணா உருவச்சிலை தணிக்கைசபையால் தடைசெய்யப்பட்டபோதிலும் 'சிலேட்' மூலம் ஆரம்பத்தில் அறிஞர் அண்ணாவின் உருவப்படமும் தி மு க சின்னமும், கொடியும் காட்டப்படுகிறது. யாழ் எம் ஜி ஆர் மன்றம் இந்த ஏற்பாட்டைச் செய்துள்ளது. குடும்பத்துடன் எல்லாரும் பார்த்து மகிழவேண்டிய இப்படம் தற்பொழுது யாழ்ப்பாணம் ராணி சினிமாவிலும் யாழ் மனோகராவிலும் ஓடிக்கொண்டிருக்கிறது. உதய சூரியன் காட்சியும் பாடலும் படத்தில் இடப்பெறாமலில்லை. காட்சி முடிவில் தி மு க கொடி காண்பிக்கப்படாமலில்லையே! இலங்கையில் எந்தப் படமும் இரவும் பகலும் தொடர்ந்து காண்பிக்கப்பட்டதில்லை இந்தப் பெருமையைப் பெற்றுக்கொண்டதும் 'அடிமைப் பெண்தான்'.

## புதிய பொலிஸ் நிலையம்

மாங்குளம், வியாழன்
மாங்குளத்தில் ஐந்து ஏக்கர் நிலத்தில் கட்டப்பட்டு வரும் பொலிஸ் நிலையத்தில் வேலைகள் யாவும் முடிவடையும் தறுவாயில் இருக்கின்றன. இந்நிலையம் அநேகமாக இம்மாதத்திலிருந்து [illegible]

(யாழ்ப்பாணம்) அசோகன் - சோ - சந்திரபாபு
[தினசரி 4 காட்சிகள்] நடித்த
அடிமைப்பெண்

வின்ஸர் யாழ்ப்பாணம்
தினசரி நான்கு காட்சிகள்
நாகேஷ், விஜயநிர்மலா
வீரப்பன், சகஸ்ரநாமம்
மற்றும் பலர் நடித்த
சோப்பு, சீப்பு, கண்ணாடி
(சிறந்த நகைச்சுவைச் சித்திரம்)

5வது வெற்றி வாரம்
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி.
பிரிபோயா, போயா 4 காட்சிகள்
கிங்ஸ்லி [கொழும்பு] பிளாஸா [வெள்ளவத்தை]
ஏ. பி. நாகராஜனின் தயாரிப்பில் உருவான
மற்றுமோர் வெற்றிச்சித்திரம்



★ சிவாஜி ★ பத்மினி
★ ஜெமினி ★ சாவித்திரி
★ முத்துராமன் ★ கே. ஆர். விஜயா
★ நாகேஷ் ★ மனோரமா
நடித்த
திருவருட் செல்வர்
[ஈஸ்ட்மென் கலர்]

...யாட்டுக்கள் விநோதஉடைப் போட்டி என்பனவும்பேச்சு பாட்டு, நாடகம் போன்ற கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறவிருக்கின்றன.

## ஆண்டு விழா

பண்டத்தரிப்பு, வியா

இளவாலை சென் ஜேம்ஸ் நெசவுநிலைய 2-ம் ஆண்டு விழா இன்று 2-ம் திகதி கொண்டாடப்படவிருக்கிறது மேற்படி நிலையத்தில் நடைபெறும் இவ் விழாவில் நிலைய மாணவிகளின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா
சோ
நடித்த
காவல் காரன்

வெஸ்லி சினிமா
மானிப்பாய்
தினசரி: 6-30, 9-30
பிரிபோயா, போயா 2-30 மணி
ஜெமினி - சரோஜாதேவி
நடித்த
கல்யாண பரிசு
புதிய கொப்பி

ஸ்ரீகாலிங்கன்
இணுவில்
தினசரி 6-30, 9-30
பிரிபோயா, போயா 2-30 மணி
ஜெய்சங்கர் - எல்விஜயலக்ஷ்மி
நடித்த
உயிரா மானமா

வல்வெட்டித்துறை
றஞ்சனா தியேட்டர்
தினசரி: 6-30, 9-30
போயா, பிரிபோயா 3 காட்சிகள்
சிவாஜி-பத்மினி கே ஆர்விஜயா
நடித்த
இரு மலர்கள்

மனோகரா
யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா
நடித்த
அடிமைப்பெண்
பல்கனி ஆசனங்கள் பதிவுசெய்ய விரும்புவோர் மனேச்சருடன் தொடர்பு கொள்ளவும்
தொலை பேசி இல: 485

REGAL JAFFNA
Daily 4-45, 7 & 9-45 p.m
Heyley Mills,
Shashi Kapoor
in
A MATTER OF
INNOCENCE
(Panavision)

...யாலய முன்றலில் நடைபெறவுள்ளது. அன்றைய தினம் பரவலாக ஏனைய இடங்களிலும் கரபந்தாட்டப்போட்டி நடைபெற்று அதன் பின் யாழ். மாவட்ட விழாவை யாழ். நகரமண்டபத்தில் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

விழா ஏற்பாடுகள் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. ஏ. ஏ. யோசெப்பினால் கவனிக்கப்பட்டுவருகின்றன

## நிரந்தரவிளையாட்டு திடல் வேண்டும்

மாவிட்டபுரம், வியா

சுதுமலை நாவலர் விளையாட்டுக்கழகத்துக்கு நிரந்தரமாக ஒரு விளையாட்டுத் திடலை அமைத்துத் தரும்படி மானிப்பாய் கிராம சபைத் தலைவரை மேற்படி கழகம் கோரவுள்ளது.

மேற்படி கழகத்தின் பொதுக் கூட்டம் திரு. ரி. குணரத்தினத்தின் தலைமையில் நடைபெற்ற போது மேற்கண்டவாறு கோருவதென தீர்மானித்தது.

இதையடுத்து நடைபெற்ற நிர்வாகிகள் தெரிவின்போது தலைவர்: திரு. ரி. குணரத்தினம். காரியதரிசி திரு. வி. தவராசா.

நா. அப்பாப்பிள்ளை, ந. குமாரசிவம், பொ. இராசநாயகம், சோ. சிவராசா, செ. சண்முகலிங்கம், ஆகியோர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

## சமமான முடிவு

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ். உதைபந்தாட்டத் தலைவர் தெரிவுக் கோஷ்டிக்கும், வதிரி டைமன் தெரிவுக் கோஷ்டிக்குமிடையில் வதிரியில் நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

இப் போட்டியில் இடைவேளைக்கு முன்னதாகவே யாழ். கோஷ்டியின் வீரர்களான அகஸ்ரினும், மணியும் இரு கோல்களைப் போட்டுவிட்டனர்.

இடைவேளையின் பின் வதிரிக் கோஷ்டியினர் மிக சாதுரியமாக விளையாடி இரு கோல்களைப் போட்டனர். இதன்பின் இரு கோஷ்டிகளும் பலமாக மோதிய போதிலும் கோல்கள் எதுவும் போடாமையால் ஆட்டம் சமனாக (2—2) முடிவடைந்தது. வதிரிக் கோஷ்டியின் வீரர் ரட்ணசிங்கத்தின் விளையாட்டு சிறப்பாக இருந்தது. (தே. நி)

...சிரமதான மூலம் கிராம சபைத் தலைவர் திரு. நிற்சிங்கம் தலைமையில் விஸ்தரிக்கும் வேலைகள் நடைபெறுகின்றன. இப்பகுதி மக்கள் இச்சிரமதானத்தில் பெரும் அக்கறை காட்டி வருகின்றனர்.

## 'சிங்கள நாடுகளையே நம்பியிருக்கிறோம்'

யாழ்ப்பாணம், வெள்ளி

'சிங்கள நாடுகளில் செய்யும் வியாபாரத்தினால் தான் இப்பகுதி மக்களில் பெரும்பாலோர் தங்கள் பொருளாதாரத்தைக் காப்பாற்றக் கூடியதாகவிருக்கிறது. இன வெறிப் பேச்சினாலோ அல்லது பிரிவினைக்கோரிக்கையினாலோ தமிழினம் உரிமை பெறமுடியாது. நாம் நமது பொருளாதாரத்தை வளம் படுத்திய பின்னரே உரிமைக்காகப் போராடவேண்டும்'

இவ்வாறு தீவுப்பகுதி முன்னேற்றக்கழகச் சார்பில் எதிர்வரும் பொதுத்தேர்தலில் போட்டியிடவிருக்கும் வழக்கறிஞர் ப. கதிரவேலு புளியங்கூடல் சந்திக்கடுகாமையில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் கூறினார்.

இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்துவதற்கு பல தொழிற்சாலைகளை தீவுப்பகுதியில்நிறுவமுயற்சி எடுக்கவேண்டுமெனவும் அவர் யோசனை தெரிவித்தார்.

திரு. நா. கந்தையா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் வே. சோமசுந்தரம். க. இரத்தினம், நவரத்தினம், ச. விஸ்வலிங்கம் சி, நகுலேசு உட்படப் பலர் பேசினர். 30 பேர் கொண்ட செயற்குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

## இ. ச. அங்கத்தவர் ராஜினமா

பச்சிலைப்பள்ளி, வியாழன்

முள்ளிப்பற்றுக் கிராம சபையின் முள்ளியான் வட்டார உறுப்பினரான திரு. கபிரியேல் மரியாம்பிள்ளை அரசாங்க உத்தியோகம் பெற்றுச் சென்றமையால் தமதுஅங்கத்துவப்பதவியை ராஜினமாச் செய்துள்ளார்.

## மோதிரம் யாருடையது?

கொக்குவில் இழக்கில் அம்மன் கோவில் தெருவில் இரு நாட்களுக்குமுன் ஒரு மோதிரம் கண்டெடுக்கப்பட்டதாக ஓர் அன்பர் 'ஈழநாடு' காரியாலயத்தில் கொண்டு கொடுத்துள்ளார். உரியவர் அடையாளங்கள் கூறி அதைப்பெற்றுக் கொள்ளலாம்.

திருமதி அந்தோனியா சுவாமிநாதர், திரு எம். வி. ஆசிர்வாதம், திரு எம். ஜேக்கப், காரியதரிசி திரு எஸ் எம். ஜே. லூயிஸ்: உபகாரியதரிசி வித்துவான் எஸ். அடைக்கலமுத்து. தனாதிகாரி திரு எஸ். திருச்செல்வம்.

யாழ் மேற்றிராணியாரின் பூசைப்பலியுடன் ஆரம்பமான இக் கூட்டத்தில் வண என். எம். சவரிமுத்து உரையாற்றினார்.

ஃ ஃ ஃ

பச்சிலைப்பள்ளி, வியா.

முள்ளியான் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: அ, பாவிலு, உபதலைவர்: சி. செல்லையா, செயலாளர்: க. மரியாம்பிள்ளை, தனாதிகாரி: சி. நடராசா. 9 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டது.

0 0 0

சுழிபுரம், புதன்

சுழிபுரம் மேற்கு குகன் ஐக்கிய பண்டசாலை வருடாந்தப் பொதுக்கூட்டம் சங்க உபதலைவர் திரு. இ. சதாசிவம் தலைமையில்நடைபெற்றது. புதுவருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்: தலைவர்: திரு. சு. கந்தையா, உபதலைவர்: இ. சதாசிவம், காரியதரிசி: சி. கந்தசாமி, உபகாரியதரிசி: நா. சதாசிவம், தனாதிகாரி: து. இராமலிங்கம் 4 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு தெரிவுசெய்யப்பட்டது.

0 0 0

மாவிட்டபுரம், வியா.

அகில இலங்கை தமிழாசிரியர் சங்க சகாயநிதிச் சங்கத்தின் வருடாந்தக் கூட்டம் திரு. இ. பொ குமாரசாமி தலைமையில் நடைபெற்றபோதுபின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: இ. பொ. குமாரசாமி, உபதலைவர்கள்: இ: செல்வராசா, பண்டிதர் ச. பொன்னுத்துரை, காரியதரிசி: ஆ. க. மாணிக்கம், உபகாரியதரிசி: சு. முருகேசு, தனாதிகாரி: இ. வேலாயுதம்.

மாகாண பிரதிநிதிகள் அடங்கிய நிர்வாகசபை ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

வல்வெட்டித்துறை, வியா

குருப்பசிட்டியைச் சேர்ந்த வை. கந்தையா என்பவரிடமிருந்து பருத்தித்துறையைச் சேர்ந்த இ. பரமலிங்கம் என்பவர் 1500 ரூபா மோசடி செய்ததற்காகப் பருத்தித்துறை மாஜிஸ்ரேட் திரு. கே. விக்னராசா எதிரிக்கு 9 மாதச் சிறைத்தண்டனை விதித்துள்ளார்.

நல்லாட்சி நடத்தவேண்டிய அவர், ஒரு பெண்ணைப் பழிவாங்குவதையே தனது வாழ்வின் இலட்சியமாகக் கொண்டு கடைசிவரை அதற்காக முயற்சியெடுத்து வருகிறார். மாவீரனாக வரும் எம். ஜி. ஆரின் புதுமாதிரியான தோற்றம் எடுப்பாக இருக்கிறது. முதலில் கூனனாக வரும்போதும், சிறுபிள்ளைபோல் கொஞ்சிக் கொஞ்சிப் பேசும்போதும், எதிரிகளை மடக்கி முன்னேறும்போதும் அவரின் நடிப்பின் முன்னேற்றத்தைக் காணமுடிகிறது. வீரனின் தாயாக வரும் பண்டரிபாய் வழக்கம்போல நடித்திருக்கிறார். ஜெயலலிதாவிற்கு இப்படத்தில் இரட்டை வேஷம் எம். ஜி. ஆரின் ஜோடியாக வரும் ஜெயலலிதா (ஜீவா) விதவிதமான உடைகளில் பல புதிய நடனங்களை ஆடுகிறார். முரசு நடனம் ஒரு புதிய முயற்சி. வைத்தியராகவரும் சந்திரபாபுவும், மந்திரவாதியாக வரும் சோவும் கதையோடு ஒட்டி நடித்திருக்கிறபடியால் நகைச்சுவைக்கு அதிகம் இடம் கொடுக்கப்படவில்லை. தளபதியாகவரும் மனோகர் சண்டைக் காட்சிகளில் எம் ஜி ஆருடன் மோதுகிறார். எம் ஜி ஆர் சிங்கத்துடன் சண்டை போடும் காட்சி தமிழ்ப் படங்களில் இதுவரை காணாத ஒருகாட்சியென்றே சொல்லலாம். இரண்டொரு காட்சிகளில் தோன்றினாலும் தனது 'குளுகுளு' த் தோற்றத்தினால் ரசிகர்களைக் கவர்ந்துவிடுகிறார் ராஜஸ்ரீ. சண்டைக் காட்சிகள் முதல் வெளிப்புறக்காட்சிகள்வரை படப்பிடிப்பு மிகச் சிறப்

மாங்குளம், வியாழன்

மாங்குளத்தில் ஐந்து ஏக்கர் நிலத்தில் கட்டப்பட்டு வரும் பொலிஸ் நிலையத்தில் வேலைகள் யாவும் முடிவடையும் தறுவாயில் இருக்கின்றன. இந்நிலையம் அநேகமாக இம்மாதத்திலிருந்து இயங்கத் தொடங்குமென பொறுப்பு வாய்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார். வடமாகாணத்தில் உள்ள சகல பொலிஸ் நிலையங்களிலும் வசதியாகவும் நவீனமாகவும் இந்நிலையம் அமைந்துள்ளதாகக்கூறப்படுகிறது.

## அபராதம்

மல்லாகம், வியாழன்

சட்ட விரோதமாக 42 கலன் வடிசாராயம் வீட்டில் வைத்திருந்ததாக மாரீசன் கூடல் வாசியான செல்வம் என்பவருக்கு எதிராக காங்கேசன்துறைப் பொலிஸார் தொடர்ந்திருந்த வழக்கில் எதிரி குற்றத்தை ஏற்றுக்கொண்டதையடுத்து மல்லாகம் நீதிபதி திரு. எஸ். ஆனந்தகுமாரசாமி அவருக்கு 330 ரூபா அபராதம் விதித்தார்.

## கைது

மாவிட்டபுரம். வியாழன்

பலாலியைச் சேர்ந்த சுப்பிரமணியம் நவரத்தினம் என்பவர் தமக்குச் சொந்தமான நீர் இறைக்கும் இயந்திரத்தை யாரோ களவாடியதாக காங்கேசன்துறைப் பொலிசில் புகார்செய்துள்ளார்.

இதுசம்பந்தமாகப் பொலிசார் சந்தேகத்தின் பேரில் செல்லப்பா பாலசிங்கம் என்பவரைக் கைதுசெய்து பாதுகாப்பில் வைத்துள்ளனர்.

''ராதா''
சக்திபூஜா அகர் பத்தி
★ ஆலயங்கள்
★ திருமண வைபவங்கள்
★ இன்பநிகழ்ச்சிகளிலும்
உங்கள் இல்லங்களை வாசனையால் பரிமளிக்கச் செய்வது
ராதா சக்தி பூஜா
அகர் பத்திகளே!
ஏக விநியோகஸ்தர்கள்:
எஸ். சுப்பிரமணியம்
அன் கொம்பனி
53, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம்.
160, செட்டியார் தெரு, கொழும்பு-11.
போன்: 541 Residence: 7068

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பீரங்கிப் படகு விவகாரம்

# பிரஞ்சு உயர் அதிகாரிகள் இருவர் பதவி நீக்கம்

## இஸ்ரேல் ராஜதந்திரிகளை திருப்பியழைக்கவும் வற்புறுத்து

பாரிஸ், ஜனவரி 1

ஐந்து பீரங்கிப் படகுகள் பிரான்ஸிலிருந்து இஸ்ரேலுக்கு மர்மமாகக் கொண்டு போகப்பட்டிருப்பது சம்பந்தமாக பிரெஞ்சு அரசாங்கம் இரு உயர்தர பாதுகாப்பு அதிகாரிகளை வேலையிலிருந்து நிறுத்தி வைத்துள்ளது.

இந்த விவகாரத்தில் சம்பந்தப்பட்டவர்கள் என்று கருதப்படும் இரு இஸ்ரேலிய ராஜதந்திரிகளையும் நாட்டைவிட்டு வெளியேறும்படி பிரெஞ்சு அரசாங்கம் கேட்டிருக்கின்றது.

பிரெஞ்சுத் துறைமுகத்திலிருந்து அண்மையில் ஐந்து பீரங்கிப்படகுகள் காணமல் போய்விட்டதாக அறிவிக்கப்பட்டது. ஆனல் நோர்வே கம்பனியொன்றுக்கு விற்கப்பட்டதாகப் பின்னர் அறிவிக்கப்பட்டது. அதன்பிறகு ஜிப்ரால்டர் துறைமுகத்தில் இந்தப்படகுகள் எந்த நாட்டுச் சின்னங்களுமின்றி வந்து சேர்ந்ததாகவும் பின் மத்தியதரைக்கடலில் பிரவேசித்ததாகவும் கூறப்பட்டது அந்தப்படகுகளை இஸ்ரேலிய மாலுமிகள் செலுத்திச் செல்வதாகவும் கூறப்பட்டது. இதன் பேரில் பிரஞ்சு அரசாங்கம் இந்தப்படகுகள் எவ்வாறு தனது துறைமுகத்திலிருந்து மாயமாய்ப் புறப்பட்டுச் சென்றனவென்பது குறித்து விசாரணைகள் நடத்தியது. நோர்வே கம்பனி எதுவும் இந்தப் பிரெஞ்சுப் படகுகளை வாங்கவில்லையென்றும் தமது கொடிகளை உபயோகிக்க அவைகளுக்கு எதுவித உரிமையுமில்லையென்றும் இதற்கான பொறுப்புகள் யாவற்றையும் பிரெஞ்சு அரசாங்கமே ஏற்க வேண்டும் என்றும் நோர்வே அரசு அறிவித்தது

பிரெஞ்சு மந்திரிசபை நேற்று அதிபர் பொம்பிடோ தலைமையில்கூடி நிலைமையைப் பூரணமாக ஆராய்ந்தபின், குறிப்பிட்ட இரு அதிகாரிகளையும் வேலையிலிருந்து இடைநிறுத்தம் செய்வதென்றும், இந்தப் படகுகள் விற்பனையில் சம்பந்தப்பட்டவர்களென்று கருதப்பட்ட இரு இஸ்ரேலிய ராஜதந்திரிகளையும் திருப்பி அனுப்பும்படி அந்த அரசைக்கேட்டுக்கொள்வதென்றும் முடிவுசெய்தது. மேலும் இப்படகு விற்பனை காரணமாக இஸ்ரேலுக்கு ராணுவப் பொருட்கள் விற்பனைசெய்வதில்லையென்ற கொள்கையில் எதுவித மாற்றமுமில்லையென்றும் பிரெஞ்சு மந்திரிசபை அறிவித்தது.

இதற்கிடையில் சம்பந்தப்பட்ட ஐந்து பீரங்கிப்படகுகளும் டைறபா என்ற இஸ்ரேலிய துறைமுகத்தைச் சென்றடைந்துள்ளன இவை இஸ்ரேல் துறைமுகம் வந்து சேர்ந்தபொழுது இஸ்ரேலியர்கள் ஆரவாரத்தோடு வரவேற்றனர்கள். ஐந்து படகுகளும் சங்கநாதம் செய்து தமது வருகையை அறிவித்தன. இப்படகுகள் இஸ்ரேல் அரசாங்கத்தால் நிதி உதவியளுக்கப்படும் எண்ணெய்க் கம்பனி ஒன்றுக்குக் கையளிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

---

### நூல் வெளியீடு

பண்டத்தரிப்பு, வெள்ளி

திருமறைக் கலாமன்றத்தின் சார்பில் அதன் நிர்வாகியாக நீ மரியசேவியரினல் 'கன்னி பெற்ற கடவுள்' என்ற இசை-உரை நாடக நூல் வெளியிடப்பட்டுள்ளது.

## 'இனத்துக்குழைத்தவர்களையே எதிர்க்க வேண்டியுள்ளது'

## அவசரகாலச் சட்டம் இந்தியாவில் ரத்து

புதுடில்லி, ஜனவரி 1

இந்தியாவில் அவசரகால சட்டம் கடந்த நள்ளிரவுடன் காலாவதியாகிவிட்டது

அவசரகால சட்டத்துக்கு பதிலாக சில ராஜ்யங்கள் புதுச்சட்டங்களை அறிவித்துள்ளன. வேறு சில ராஜ்யங்கள் புதுச்சட்டம் எதையும் கொண்டுவருவதில்லையென்று முடிவு செய்துள்ளன.

ஹரியாண பஞ்சாப் ராஜ்யங்கள் அவசரகால சட்டம் காலாவதியானதால் அதற்கு பதிலாக புதுச்சட்டங்களைக் கொண்டுவருவதில்லையென்று முடிவு செய்துள்ளன. மத்திய பிரதேசம் ஒரிஸா ஆகிய ராஜ்யங்கள் புதிதாக விசேஷசட்டங்களை அறிவித்துள்ளன.

அவசரகால சட்டம் காலாவதியானதால் மாற்று சட்டம் எதையும் கொண்டு வரும்நோக்கம் மேற்கு வங்க அரசுக்கு கிடையாது என்று துணை முதலமைச்சர் திரு ஜோதிபாசா அறிவித்திருக்கிறர். அவசரகால சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருந்த 479 பேர் விடுதலை செய்யப்பட்டனர் என்றும் அவர் அறிவித்தார்.

அவசரகால சட்டத்துக்கு பதிலாக புதியசட்டம் எதையும் பிரகடனப்படுத்தும் எண்ணம் தமது அரசுக்குக் கிடையாது என்று கேரள முதலமைச்சர் அச்சுத மேனன் கூறியிருக்கிறர்.

அவசரகாலசட்டம் காலாவதியானதினல் அதற்கு மாற்றுச் சட்டங்களை இயற்றிக் கொள்ள சில [illegible]ஜ்யங்கள் முடிவுசெய்திருப்பதை கம்யூனிஸ் தலைவர் பூபேஷ் குப்தா கண்டித்திருக்கிறர். இந்திய அரசின் தூண்டுதலின் பேரில் இந்தச் சட்டங் [illegible]

### யூகோவில் மீண்டும் நிலநடுக்கம்

பெல்கிரேட், ஜன. 1

யூகோஸ்லாவியாவில் பன்யாலுக்கா என்ற நகரம் மீண்டும் நிலநடுக்கத்தினல் பாதிக்கப்பட்டிருக்கின்றது. கடந்த அக்டோபரில் இந்த நகரம் நில அதிர்ச்சியால் கடுமையாகப் பாதிக்கப்பட்டது. அப்போது நகரின் கட்டிடங்களிலிருந்து வெளியேறியவர் மீண்டும்வந்து குடியேறியிருக்கும் நிலையில் இப்பொழுது இரண்டாவது தடவையாக நிலநடுக்கம் பாதித்துள்ளது இந்தமுறை ஒரு வயோதிப மாதும் பலியானதாகவும் வேறு பலர் காயமடைந்ததாகவும் தெரிகின்றது

## உலகச் செய்திகள்

### யூதாண்டின் ஆபிரிக்க விஜயம்

ஐ. நா.

ஆபிரிக்க நாடுகளில் 3வார காலம் சுற்றுப்பயணம்செய்வதற்காக ஐக்கியநாடுகளின் தலைமைக் காரியதரிசி யூதாண்ட் நேற்று முன்தினம் புறப்பட்டுள்ளார். [illegible]செனகல், கினிலைபீரியா, மொரிஷியான காண, கெமரூன்டோகோ, நைகர், அப்பர் [illegible]

ஆபி[illegible] யூதாண்ட் விஜயம் செய் [illegible] ஆபிரிக்க சுற்றுப்பய [illegible]

### இரணைமடு நீர்மட்டம் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், வெள்ளி

தொடர்ந்து பெய்து வரும்மழையினல்இரணைமடுநீர்த்தேக்கத்தின்நீர்மட்டம் அதிகரித்து வருகின்றது. இரணைமடுவில் வழமையான நீர்மட்டத்தை விட இரண்டு அடி நேற்றுக் காலை கூடுதலாக இருந்ததாக நீர்ப்பாசன இலாகாவினர் தெரிவித்தனர். (கா: நி.)

### 'இளைஞர்களினல் சாதிக்கமுடியும்'

பண்டத்தரிப்பு, வியா.

'சமுதாயத்தையே மாற்றி அமைக்கக்கூடிய பெரிய சக்தி இளைஞரிடம் இருக்கிறது. எதனையும் சாதிக்கும் திறமை இளைஞரிடமிருந்தும், அவர்கள் அதை வாழ்க்கையில் பிரயோகிக்க தவறுகின்றனர். இதுமிகவும்வருந்தத்தக்கதொன்ருகும். இன்றையஇளைஞரிடையே இறைபகதி அருகிவருவதும் வருந்தத்தக்கதொன்ருகும்' என இளவாலை சென். ஜேம்ஸ் இளைஞர் கழகத்தினரால் ஒழுங்குசெய்யப்பட்டகிறிஸ்மஸ் கலைவிழாவில் கலந்து கொண்டு உரைநிகழ்த்திய திரு. எஸ். டேவிட் குறிப்பிட்டார்.

---

### அனலைதீவு தந்திச்சேவை சீர்கேடு

அனலைதீவு, வியாழன்

அனலைதீவு உப-தபாற்கந்தோரில் தந்தி விநியோகம் மிகச் சீர்கேடான நிலையில் உள்ளது.

காலை 7-30, 8-30, 11, பிற்பகல் 2-30, 4-30, 5-30 மணியே இங்குள்ள தந்திச் சேவை நேரங்களாகும். காலை 7-30மணிக்கு ஏற்கப்படும் தந்திகள் உடன் பட்டுவாடாச் செய்யப்படாமல் காலை 8-30 மணிக்கு ஏற்கப்படும் தந்தியுடன் சேர்த்தே பட்டுவாடாச் செய்யப்படுகிறது. மாலை 5-30மணிக்கு ஏற்கப்படும் தந்தி மறுநாட் காலை 7-30 மணி, 8-30 மணித் தந்திகளுடன் சேர்த்தே பட்டுவாடாச்செய்யப்படுகிறது. இந்த வகையான தந்திச் சேவையால் மக்கள் பெரும் கஷ்டமடைகின்றனர்.

காலை 7-30, 8-30மணிக்கும் மாலை 5-30 மணிக்கும் ஏற்கப்படும் தந்திகள் சாதா [illegible]

# இரு நிமிடங்களில் நிறை வேறியது

அம்பாறை, வியாழன்

1970ம் ஆண்டுக்கான மட்டக்களப்பு மாநகரசபையின் வரவு-செலவுத் திட்டம் எவரும் எதிர்பாராதவகையில் இரு நிமிடங்களில் நிறைவேற்றப்பட்டது.

இம்மாநகரசபையின் எதிர்தரப்பினர் மேற்படி வரவு செலவுத் திட்டத்தின் மீது காரசாரமான விவாதம் நடாத்தவெனத் தீர்மானித்திருந்தனர். அவர்கள் சபைக்கு வருமுன்னரே வரவு-செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டுவிட்டது கண்டு அதிசயித்தனர். கடந்த திங்களன்று வரவு-செலவுத் திட்டம் பற்றி விவாதிக்கக் குறிப்பிட்ட நேரத்தில் சபை கூடியபொழுது மேயர் திசவீரசிங்கம் வரவு செலவுத்திட்டத்தை சமர்ப்பித்தார், அவரின் குழுவைச் சேர்ந்த 9 அங்கத்தவர்கள் மட்டுமே இக்கூட்டத்துக்குக் குறிப்பிட்ட நேரத்தில் வந்திருந்தனர். எதிர்தரப்பினர் வரவு தாமதமாகவே குறித்த் நேரத்தில் வரவு-செலவுத் திட்டம் நிறைவேறியது.

சபையின் பெரும்பாலான அங்கத்தவர்கள் பிரசன்னமாகாதிருந்த வேளையில் எதுவித விவாதங்களுக்கும் இடமளிக்காது மேயர் வரவு செலவுத் திட்டத்தை நிறைவேற்றியது நியாயமானதல்ல என இச்சபையில் அங்கம்வகிக்கும் மட்டக்களப்பு ஆட்சிமன்ற உறுப்பினர்களான திரு. செ. இராசதுரையும், ஜனப் லத்தீப் சின்னலெப்பையும் விடுத்த தங்களது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர். திரு. இராசதுரை மேயரின் இச்செயல் ஜனநாயகத்துக்கு முரணனதென மேலும் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

## பிறருக்குச் சொந்தமான கூப்பன்கள் வைத்திருந்தார்

### 110 ரூபா அபராதம்

முல்லைத்தீவு. புதன்

முல்லைத்தீவு கடைவீதியைச் சேர்ந்த இளையதம்பி நடராசா என்னும்வியாபாரி தம்வசம் பிறருக்குச் சொந்தமான பதினெரு கூப்பன் புத்தகங்களை சட்டவிரோதமாக வைத்திருந்தார் என முல்லைத்தீவு உணவு விலைக் கட்டுப்பாட்டுப் பரிசோதகர் திரு. வி. முதலித்தம்பியினல் முல்லைத்தீவு நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில் நீதிபதி திரு. ஆர். நவரத்தினம் எதிரியைக் குற்றவாளியாகக்கண்டு ரூபா 110 அபராதம் வதித்து குற்றப் பணம் கட்டத் தவறினல் 3 வார சாதாரண சிறைத் தண்டனை எனத் தீர்ப்பளித்தார்.

---

### உடுப்பிட்டி பாடசாலைகளுக்கு நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம். வெள்ளி

இவ்வாண்டு உடுப்பீட்டித் தொகுதியிலுள்ள சில பாடசாலைகளுக்கு உபசபாநாயகர் திரு எம் சிவசிதம்பரத்தின் முயற்சியைத் தொடர்ந்து ப[illegible]ம் ஒதுக்கப்பட்டுள்ளது.

நெல்லியடி எம் மி பாட [illegible]

### தொலைபேசி வசதி கிடைக்கும்

புங்குடுதீவு, வியாழன்

புங்குடுதீவு கல்வி வளர்ச்சிக் கழகத் தலைவர் திரு. கா. மதியாபரணம் ஜே. பி. தலைமையில் தூதுக்குழுவொன்று தபால்மா அதிபதியை சந்தித்துப் புங்குடுதீவு இறுப்பிட்டிக்கும் ஊரதீவுக்கும் தொலைபேசி அமைத்துத் தரும்படி கேட்டுக்கொண்டது. நடப்பு வருடத்தில் செய்துதருவதாக தபால்மா அதிகாரி வாக்குறுதி அளித்தார்.

---

### 'அநுராதபுரத்தில் அமைக்கவும'

பருத்தித்துறை, வியாழன்

வடக்கு, கிழக்கு மாசாணங்களுக்குப் பொதுவான மையமாகிய அநுராதபுரத்திலே பல்கலைக்கழகம் அமைவதே பொருத்தம். தேசிய ஒற்றுமைபற்றிப் பேசுபவர்கள. தமிழ், சிங்கள மன்னர்களின் இராசதானியானதும் புராதன ஈழத்தின் கலை கலாசார, நாகரிகத்தின் தொட்டிலாக மிளிர்வது [illegible]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ‘இனத்துக்குழைத்தவர்களையே எதிர்க்க வேண்டியுள்ளது’

## தீவுப்பகுதியில் தமிழரசு நிலை பற்றி வாலிப முன்னணித் தலைவர்

ஊரைதீவு, வியா.

‘இலங்கை-இந்திய ஒப்பந்த அமுல் மசோதாவைத் தமிழினத்துக்குப் பாதக மற்ற முறையில் திருத்திய பின்பே நாம் ஆதரித்தோம். எனவே இதனல் தமிழனுக்கு எந்தவிதமான பாதகமுமில்லை. ஆனல் இதே மசோதாவையும் அடையாள அட்டை மசோதாவையும் தமிழ்க்காங்கிரஸ் தலைவரும் ஆதரித்தார். ஆனல் இன்றைக்கு தமிழரசார் ஆதரித்தது தவறு என்கிருர். இது வியப்புக்குரியது.’

இவ்வாறு கிளிநொச்சி ஆட்சிமன்ற உறுப்பினர் பண்டிதர் கா. பொ. இரத்தினம் ஊரதீவில் நடந்த தமிழரசு வாலிப முன்னணி அங்குரார்ப்பணக் கூட்டத்தில் உரையாற்றுகையில் தெரிவித்தார். திரு. சி. நல்லதம்பி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு இரத்தினம் எம் பி தொடர்ந்து பேசுகையில், இன்றைய அரசியல் அமைப்பு தமிழருக்கு மாருகவிருப்பதாலேயே தமிழருக்கு அநீதி இழைக்கப்படுகிறது என்ருர்.

இலங்கைத் தமிழரசு வாலிப முன்னணித் துணைத் தலைவர் திரு. க. திருநாவுக்கரசு பேசுகையில், எதிர்வரும் பொதுத்தேர்தலில் எமது கட்சி மிகவும் இக்கட்டான சூழ்நிலையை தீவுத் தொகுதியில் எதிர்நோக்கியுள்ளது. கடந்த தேர்தலில் தமிழினத்துக்கு விரோதமானவர்களை எதிரணியில் சந்தித்து வெற்றி கண்டோம். இம்முறையோ சென்ற முறை எம்மோடு தோளோடு தோள்நின்றுழைத்த தோழர்களையும் பெரியார்களையும் எதிரணியில் சந்திக்க வேண்டியுள்ளது என்ருர்.

வேலணை அ. இராசரத்தினம் உட்படப் பலர் பேசினர்.

வாலிப முன்னணித் தலைவராக இளைப்பாறிய ஆசிரியர் சி. நல்லதம்பியும், பொருளாளராக துணைத் தபாலதிபர் வே. கண்ணையாவும், செயலாளராக இ. குணமும் தெரிவு செய்யப்பட்டனர். நிர்வாகக் குழுவொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

---

## 1969-ல் யாழ்ப்பாணத்தில் 60 அங்குல மழை பெய்தது

யாழ்ப்பாணம், வெள்ளி

தொடர்ந்து பெய்துவரும் மழை காரணமாக யாழ்ப்பாணத்திலும் வெள்ள அபயம் ஏற்பட்டுள்ளது.

குளங்கள், வாய்க்கால்கள் வடிகால்கள் ஆகியன நிரம்பி விட்டன. குளங்களுக்கு அருகாமையிலிருக்கும் குடிசைகளில் வாழும் மக்கள் குடிபெயரவேண்டிய நிலையும் ஏற்படலாமென அஞ்சப்படுகிறது

யாழ்ப்பாணத்தில் நேற்றுடன் முடிந்த 1969-ம் வருடத்தில் நேற்றுவரை 60 அங்குலத்திற்கும் மேற்பட்ட மழை பெய்துள்ளது. இது 1968-ம் வருடத்தைவிட நாற்பது அங்குலம் கூடுதலாம்.

டிசம்பர் மாதம் மட்டும் 16.5 அங்குல மழைபெய்துள்ளது. நேற்றுமுன்தினம் காலை 8-30 மணியிலிருந்து நேற்று காலை 8-30 மணிவரையான 24 மணி நேரத்தில் மட்டும் யாழ்ப்பாணத்தில் 4.10 அங்குல மழைபெய்துள்ளது.

ஒரு நாளில் பெய்த கூடுதலான சராசரி மழை இதுவேதான் என்று யாழ்ப்பாணம் அவதான நிலையத்தினர் தகவல் தெரிவித்தனர்.

இலங்கை அவதான பகுதியினரால் நான்கு தினங்களுக்கு முன்னர் விடுக்கப்பட்ட மழை, புயல் அபாயம் நேற்றுக்காலையுடன் முடிவடைந்துவிட்டதாக யாழ்ப்பாணம் பொலிஸ் தலைமைக்காரியாலயம் தெரிவித்தது.

நேற்றுப்பகல் வானம் சிறிது வெளிப்பாகக்காணப்பட்டது. (கா நி)

---

## கோழி திருடிய மூன்று பெண்கள்

### ஒருவருக்குசிறை; இருவருக்கு அபராதம்

மல்லாகம், வியா

ஊர் சுற்றித்திரிந்து காங்கேசன்துறை, சுன்ஞகம் பொலிஸ் பகுதிகளிலுள்ள வீடுகளில் புகுந்து கோழிகள் களவாடிய குற்றத்தை ஒப்புக்கொண்ட குறவர்கூட்டத்தைச் சேர்ந்த மூன்று பெண்களுக்கு மல்லாகம் நீதிபதி திரு எஸ். ஆனந்தகுமாரசாமி தண்டனை விதித்தார்.

ஏற்கனவே ஐந்துதடவைகள் குற்றப்பட்டிருந்த ஆர் சரோஜா என்ற பெண்ணுக்கு 9 மாத கடுழியச் சிறைத்தண்டனையும் இரு தடவைகள் முன்னர் தண்டனைபெற்ற வீ. செபமாலை என்ற பெண்ணுக்கு ரூ 100 அபராதமும் விதிக்கப்பட்டது. காமாட்சி என்ற மற்ருெரு பெண் கோழி திருடிய குற்றத்திற்கு ரூபா 25 அபராதம் செலுத்திஞர்.

---

## அமைச்சர் பிரேமதாஸா யாழ். வருவார்

மல்லாகம், வியாழன்

உள்ளூராட்சி அமைச்சர் திரு. ஆர். பிரேமதாஸா ஜனவரி மாத நடுப்பகுதியில் மீண்டும் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யவிருக்கின்ருர். அமைச்சரின் விஜயத்திற்கான ஏற்பாடுகளைச் செய்து திகதி நிர்ணயம்செய்ய மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. ஏ. ஏ. யோசேப் கொழும்பு சென்றுள்ளார்.

திரு பிரேமதாஸா ஏழாலைக் கிராமசபையின் புதிய அலுவலகத்தை திறந்துவைப்பார் எனத் தெரிகிறது.

---

...மொரிஷியானு, காஞ, கெமரூன், டோகோ, நைகர், அப்பர்வோல்டா, ஐவரிகோஸ்ட் ஆகிய ஆபிரிக்க நாடுகளுக்கு யூதாண்ட் விஜயம் செய்தார். ஆபிரிக்க சுற்றுப்பயணத்தை முடித்துக்கொண்டு திரு. யூதாண்ட் ஜனவரி 19ம் திகதி நியூயோர்க் திரும்புவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

### பதவியேற்ருர்

மணிலா

பிலிப்பைன்ஸின் ஜனதிபதியாக திரு. பேர்டிஞட் மார்கோஸ் பதவியேற்றுள்ளார். இப்பதவி யேற்பு வைபவத்தின்போது 40 நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் பிரசன்னமாகியிருந்தனர். 2வது தடவையாக திரு. மார்கோஸ் அடுத்த 4 ஆண்டுகள் ஜனதிபதிப்பதவியை வகிப்பார்.

### 10 லட்சம்பேருக்கு சளிசுரம்

லண்டன்

நத்தார் வேளையில் பிரிட்டனில் 10 லட்சம் பேருக்கு மேற்பட்டோர் சளிச்சுரத்தினல் பீடிக்கப்பட்டு அவஸ்தையுறுகிருர்கள்.

### நிலத்துக்கடியில் அணுசோதனை

வாஷிங்டன்

நிலத்துக்கடியில் கஸாகிஸ்தான் பகுதியில் ரஷ்ய அணுசோதனையொன்றை நடத்தியுள்ளதாக அமெரிக்காவின் அணுசக்தி கமிஷன் அறிவித்துள்ளது.

### இராணுவ அதிகாரி கைது

ஜாகர்த்தா

இங்குள்ள உயர்தர இராணுவ அதிகாரிகள் சிலர் பதவியினின்றும் நீக்கப்பட்ட முன்னுள் ஜனதிபதி சுகர்நோவை திரும்பவும் பதவியிலமர்த்த முயற்சி செய்வதாககிடைத்த செய்தியின் பேரில் பிரதம இராணுவ ஜெனரல் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். பிலிப்பைன்ஸின் முன்னுள் இராணுவ ஜெனரல் மேர்ஸிட்டும் இருவாரங்களுக்கு முன்னர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது

### முன்னுள் வெளிநாட்டமைச்சர் பேராசிரியரானுர்

அட்லாண்டா

அமெரிக்காவின் முன்னுள் வெளிநாட்டுஅமைச்சர் திரு டீன்ரஸ்க், ஜோர்ஜியா பல்கலைக்கழகத்தின் சர்வதேச சட்டப் பேராசிரியராக நியமனம் பெற்றுள்ளார் இந்த நியமனத்தை பல்கலைக்கழக நிர்வாக சபை அனுமதித்துள்ளது.

---

...றிக் கொள்ள சில ...யங்கள் முடிவுசெய்திருப்பதை கம்யூனிஸ் தலைவர் பூபேஷ் குப்தா கண்டித்திருக்கிருர். மத்திய அரசின் தூண்டுதலின் பேரில் இந்தச் சட்டங்கள் கொண்டுவரப் ...டிருப்பதாக அவர் குற்றஞ்சாட்டினுர்.

## இப்படியும் நடந்தது!

பருத்தித்துறை, வியாழன்

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியைச் சேர்ந்த எஸ். இரத்தினபாலா என்னும் உயர்வகுப்பு மாணவன் கடந்த வாரம் நேர்முகப் பரீட்சை ஒன்றுக்காக கொழும்பு சென்ருராம். தமது பெட்டியில் பணம், மற்றும் சான்றுப் பத்திரங்கள், உடுப்புகள் ஆகியன கொண்டு சென்ற இவர், அனுராதபுரத்துக்கு அப்பால் தமது பெட்டி திருட்டுப்போய்விட்டதை உணர்ந்தார். பயணத்தை இடையில் முடித்துக்கொண்டு வீடு திரும்ப எண்ணிய இம்மாணவருக்குத் திரும்பிவரப் பணமில்லாது கொழும்புவரை சென்ருராம். பின் அங்கிருந்து தமது நண்பரிடம் பணம் வாங்கிமீண்ட அவரை அதிசயிக்கச்செய்த ஒரு சம்பவம் வீட்டில் காத்திருந்தது. அவருடைய கல்வித் தகைமைச் சான்றிதழ்களும், நற்சாட்சிப் பத்திரங்களும் தபால்மூலம் அனுப்பப்பட்டு வீட்டில் கிடந்தன.

## நிறைவேறியது

யாழ்ப்பாணம், வெள்ளி

நயினதீவுக்கு சிங்கள ஆசிரியர் நியமிக்கப்படவேண்டுமென்று கோரும் தீர்மானம் மீண்டும் நயினதீவு கிராமசபையில் நிறைவேறியுள்ளதாக கிராமசபைத் தலைவர் திரு சி க தம்பையா தெரிவிக்கிருர்.

நயினதீவு பாடசாலைகளின் 2 பெற்ருேர் ஆசிரியர் சங்கங்கள் சிங்கள ஆசிரியர் நியமனத்தை எதிர்த்து வடமாநில கல்வி அதிபருக்கு தீர்மானங்கள் நிறைவேற்றி அனுப்பியபின்னரும் இத்தீர்மானம் கிராமசபையில் நிறைவேறியுள்ளது.

கடந்த நவம்பர் மாதம் 25ம் திகதி நடைபெற்ற கி ச மாதாந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட இதே தீர்மானத்தை டிசம்பர் 20ம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் திரு க துரைமணியும், திரு அ நல்லையாவும் எதிர்த்துப் பேசினர். என கி ச தலைவர் மேலும் தெரிவித்துள்ளார்.

---

தந்திச் சேவையால் மக்கள் பெரும் கஷ்டமடைகின்றனர்.

காலை 7-30, 8-30 மணிக்கும் மாலை 5-30 மணிக்கும் ஏற்கப்படும் தந்திகள் சாதாரணத்தபாலிலும், பிந்தியே மக்களுக்கு கிடைக்கின்றன. இங்குள்ள படகுச்சேவை அமைப்பின்படி இம்மூன்று நேரங்களிலும் தந்தி கண்டு மக்கள் பிரயாணம் மேற்கொள்ளமுடியாமல் அவதியுறுகின்றனர்.

## “முற்ருக எதிர்க்கிருேம்”

அனலைதீவு, வியா

“தீவுப்பகுதிஉள்ளூராட்சி மன்றங்களின் சார்பில் மண்டைதீவு கிராமசபைத் தலைவர் திரு. க. கைலாசபிள்ளை 20-12-69லும் 21-12-69லும் இலங்கைத் தேசிய உயர்கல்விச் சபைத் தலைவர் திரு. டாக்டர் ஜி. பி. மலலசேகராவுக்கு அனுப்பிய மகஜரில், யாழ்ப்பாணத்தில் தமிழ்ப் பல்கலைக்கழகம் அமைக்கப்படவேண்டுமெனக் கோரியுள்ளதாக பத்திரிகைமூலம் அறிந்தோம். அனலைதீவு கிராமசபையும் யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகம்கோருவதாக அதில் குறிப்பிட்டுள்ளது.

ஆனல் 15-12-69ல் கூடிய அனலைதீவுக் கிராமசபை தனது கூட்டத்தில் திருமலையிலேயே தமிழ்ப் பல்கலைக்கழகம்அமையவேண்டுமென ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றி டாக்டர் ஜி.பி. மலலசேகராவுக்கு அனுப்பியுள்ளது.

மண்டைதீவுகிராமசபைத் தலைவரினல் அனுப்பப்பட்ட மகஜர் எமது கிராமசபையின் அங்கீகாரமின்றி அனுப்பப்பட்டுள்ளது. அந்த மகஜரை நாங்கள்முற்ருகஎதிர்க்கின்ருேம்.

இவ்வாறு அனலைதீவுக் கிராமசபை உபதலைவர் திரு. மு. வே. மயில்வாகனம் ஓர் அறிக்கைமூலம் தெரிவிக்கின்ருர்.

## கலைவிழா நடத்துவர்

மல்லாகம், வியாழன்

கட்டுபெத்தை இலங்கை உயர்தொழில் நுட்பவியற் கலாசாலைத் தமிழ் மன்றத்தினர் ஜனவரி பிற்பகுதியில் கலைவிழாவொன்றினை நடாத்த ஒழுங்குகள் செய்துவருகின்றனர். பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவிருக்கும் இவ்விழாவில் கருத்தரங்கு, கவியரங்கு, நாட்டியம், நாடகம் போன்ற நிகழ்ச்சிகள் இடம்பெறவிருக்கின்றன.

---

...சாலைகளுக்கு உபசபாநாயகர் திரு எம் சிவசிதம்பரத்தின் முயற்சியைத் தொடர்ந்து ப... ம் ஒதுக்கப்பட்டுள்ளது.

நெல்லியடி எம் மி பாடசாலைக்கு 15 ஆயிரம் ரூபாயும், புலோலி எம் மி பாடசாலைக்கு 15 ஆயிரம் ரூபாயும், தேவரையாளி இந்துக் கல்லூரிக்கு 10 ஆயிரம் ரூபாயும், கரணவாய்வேதாரணியம் த க பாடசாலைக்கு 10 ஆயிரம் ரூபாயும் கட்டடம் அமைப்பதற்காக கல்வி அமைச்சு ஒதுக்கியுள்ளது. (தே நி)

...ஒற்றுமைபற்றிப் பேசுபவர்கள். தமிழ், சிங்கள மன்னர்களின் இராசதானியானதும் புராதன ஈழத்தின் கலை கலாசார, நாகரிகத்தின் தொட்டிலாக மிளிர்வதுமான அனுராதபுரமே எக்கோணத்திலிருந்து நோக்கினும் பல்கலைக்கழகத்திற்குப் பொருத்தமான இடமாகும் என்பதை அறிவர்.

இவ்வாறு கரவை வாணி கலைக் கழக இயக்குநர்சபை பல்கலைக்கழகம்பற்றி உயர் கல்விச்சபைக்கு அனுப்பியுள்ள மகஜர் ஒன்றிற் குறிப்பிட்டுள்ளது.

---

# இன்றைய பலன்

மார்கழி மாதம் 18-ம் திகதி 2-1-70]

சோதிடக்கலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளை

**மேஷம்**- மகிழ்ச்சிகரமான நினைவுகளுடன் காலையில் விழித்தெழுவீர்கள். இடையில் துண்டிக்கப்பட்ட தொடர்புகள் மீண்டும் தொடர்கதையாகலாம். வீட்டிலும் நல்ல சூழ்நிலை தென்படுகின்றது.

**ரிஷபம்**- எதிலும் நன்ருகச் சிந்தித்த பின்பு செயலாற்றவும் நண்பர் ஒருவர் மூலம் நீங்கள் ஏமாற்றமடையலாம். வியாபாரிகளாயின் அதிக முதலீட்டை இன்று தவிர்த்துக்கொள்ளவும். திருப்தியற்றதினம்.

**மிதுனம்**- பொதுத்துறையில் அதிக மனநாட்டம் செலுத்துவீர்கள். சிலர் அரசியல் துறையிலும் அடியெடுத்துவைக்கலாம். பெரியவர் ஒருவருடைய அறிவுரைகள் முன்னேற்றத்தைத் தரும். நல்ல நாள்.

**கடகம்**- தொழில்துறையில் வெற்றிக்கு இடமுண்டு. புதிய முயற்சிகளில் அதிக உற்சாகம் பிறக்கும். சிலருக்கு வியாபாரநோக்கமாக வெளிநாடு செல்லும் சந்தர்ப்பமும் கிடைக்கலாம். சுவையானதினம்.

**சிம்மம்**- இலாபகரமானதினம். பொருள்வரவுக்குத் தாராளமாக இடமுண்டு. வணிகர்களுக்கு வியாபார விருத்தி ஏற்படும். நீண்டநாள் எதிர்பார்த்த அரிய சந்தர்ப்பம் இன்று கிடைக்கக்கூடும். புத்திரர் புகழுமுண்டு.

**கன்னி**- ஏமாற்றங்கள் நிறைந்து காணப்படுகின்றன. சிறு தவறுதல் பெரிய நெருக்கடியை உருவாக்கலாம், தொழில்துறையில் மறைமுக எதிர்ப்புக்கள் தோன்றும், எதிலும் முன்னெச்சரிக்கையுடன் இருக்கவும்.

**துலாம்**- கருடப்பார்வை உங்களை வட்டமிடும். வேண்டாதவர்களின் குறுக்குவழித் தலையீடு உங்களை வேதனையில் ஆழ்த்தும். சிலருக்கு உடல்நலமும் சிறிது பாதிக்கப்படலாம். சுகாதாரம்வேண்டும்.

**விருச்சிகம்**- குடும்பத்தில் மகிழ்ச்சிகரமான சம்பவங்களுக்கு இடமுண்டு. சிலர்வாழ்க்கையில் தனச்சிறப்பும் இடம்பெறலாம். வியாபாரிகள் புதிய முதலீடுகளில் பணத்தைச் செலுத்த விரும்புவர். முன்னேற்றமான நாள்.

**தனுசு**- எதிலும் அவசரப்போக்கு உருவாகும். திடீர் முடிவின் மூலம் ஒரு அருமையான சந்தர்ப்பத்தைக் கோட்டைவிடநேரிடலாம். அன்னியர்களின் சூழ்ச்சிகள் பலமாகவிருக்கும். தெய்வநம்பிக்கை நன்று.

**மகரம்**- மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் இடம்பெறும், மாதுருவழியால் தனவரவுக்கும் இடமுண்டு. வாகனச் சாரதிகள் அதிக பயன்அடைவர். ...ாக்டர்கள் வாழ்க்கை பிரகாசமாகவிருக்கும் சுபதினம்.

**கும்பம்**- இதயம் இன்பத்தால் துள்ளும். கவர்ச்சிகரமான பொருட்களில் அதிக ஆர்வம் பிறக்கும். சிலர் வாழ்க்கையில் பொதுசனத் தலைமைக்கும் இடமேற்படலாம். முயற்சி முன்னேற்றத்தைத் தரும்.

**மீனம்**- திகைக்கவைக்கும் திருப்பங்கள் ஏற்படும். சிலர் புனைந்துரைகளால் வேதனைப்படுவார்கள். சிறிய விபத்துக்கு இடமேற்படுமாகையால் போக்குவரத்தைத் தவிர்த்துக்கொள்ளவும். மனத்திடம் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

பலவீனமானவர்கள் ஒருபோதும் மன்னிப்பது கிடையாது. மன்னிப்பது என்பது பலசாலிகளுடைய இயல்பு. மன்னிப்பதுதான் போர்வீரனின் ஆபரணம்.

...மகாத்மாகாந்தி.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 889.

யாழ்ப்பாணம் சௌமிய வருஷம் மார்கழி மாதம் 18-ந் திகதி (2-1-70)


## பெரு வெள்ளம்

நாட்டின் பல பகுதிகளிலும் தொடர்ந்து பெய்து வரும் பலத்த மழை காரணமாக பல இடங்களிலும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு, அம்பாறைப் பகுதிகளும், தென்மாகாணத்தில் அம்பாந்தோட்டை, மாத்தறை, கதிர்காமப் பகுதிகளும் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளாகும். வடமாகாணத்தின் சில பகுதிகளும், வடமத்திய மாகாணம், சப்ரகமுவ மாகாணம் ஆகியவற்றின் சில பகுதிகளும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. காலநிலை இன்னும் சீராகாததால் நிலைமை இன்னும் மோசமாகலாமென அஞ்ச இடமுண்டு. மண்சரிவினுலும் வெள்ளத்தினுலும் சில உயிர்களும் பலிகொள்ளப்பட்டிருக்கின்றன. கால்நடைகளும் பல மாண்டிருக்கின்றன. பயிர்களும் வெள்ளத்தில் அமிழ்ந்துள்ளதால் பெரும்போகச் செய்கை பாதிக்கப்பட்டு உணவில் தன்னிறைவுகாணும் முயற்சிக்கும் பெரும் இடையூறு ஏற்படக் கூடுமென்ற அச்சம் ஏற்பட்டிருக்கிறது. பல்லாயிரக்கணக்கான மக்கள் வீடு வாசல்களை இழந்து ஒரு சில தினங்களுக்குள்ளேயே அனுதைகளாக நிற்கின்றனர் வெள்ளம் வீடுகளில் புகுந்துள்ளதால் வீடு வாசல்களை விட்டு வெளியேறி பாடசாலைக் கட்டிடங்களிலும் தேவாலயம், ஆலயம் மற்றும் பொதுஇடங்களிலும் தஞ்சம் புகுந்துள்ளோர் ஏராளம். வெள்ளத்தினுல் சூழப்பட்டு வெளியேறமுடியாதநிலையில் பசி பட்டினியுடன் எந்த நேரம் உயிர் போகுமோவென்ற நிலையில் நிற்போர் பலர்.

வெள்ளத்தினுல் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உடனடியாக செய்யவேண்டிய உதவி அவர்களுக்கு உணவும், உடையும் தங்குவதற்கு

படாமல் தப்பியிருக்கும் மக்கள் தங்களால் எந்த அளவுக்கு கஷ்டப்படும் மக்களுக்கு உதவிசெய்யவேண்டியது அவர்களுடைய கடமை இதைச் செய்ய தவறமாட்டார்களென்பது நமது நம்பிக்கை.

இப்பெரு வெள்ளத்தினுல் ஏற்பட்ட சேதம் எவ்வளவு என்பதை இப்போது மதிப்பிடுவது சுலபமல்ல. சரியான மதிப்பீடு செய்வதற்கு சிறிது காலதாமதமாகலாம். ஆனுலும் சமூகசேவைப் பகுதியினரும் அந்தந்தப் பகுதி அரசாங்க ஊழியரும் பொதுஸ்தாபனங்களின் ஒத்துழைப்புடன் துரிதமாக வெள்ளச்சேதங்களை மதிப்பெடுத்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு, அவர்களின் புனர்வாழ்வுக்குத் துரிதமாக உதவிபுரியவேண்டியது அவசியம். சரியான மதிப்பெடுக்காமல் அளிக்கப்படும் உதவி, கிடைக்கவேண்டியவர்களுக்குக் கிடைக்காமல், தேவையற்றவர்களுக்குப் போய்ச் சேர்ந்துவிடுமென்பது கடந்தகாலங்களில் கண்டறிந்த உண்மை. நிவாரண உதவிஅளிக்கும் கடமையில் ஈடுபடுவோர் தமது கடமையை நேர்மையாகவும் பொறுப்புடனும் கவனத்துடனும் செய்யவேண்டுமென்பதையும் இச்சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்டுவது நமது கடமையெனக் கருதுகிறேம்.

இப்போது ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கு போன்ற இயற்கையின் சீற்றத்தை அரசாங்கமோவேறுயாருமோ தடுத்துவிடமுடியாதென்பது உண்மையே. ஆனுலும் பெருவெள்ளம் ஏற்படுவதும் பல இடங்களில் போக்குவரத்துச்சேவை தடைப்படுவதும் இடையிடையே ஏற்படும் நிகழ்ச்சிகள்தான். ஆறுகள், நதிகள் பெருக்கெடுப்பதும் தாழ்ந்தபகுதிகள் வெள்ளத்தினுல் அமிழ்வதும் வீதிகளில் வெள்ளம் பாய்ந்து

## சென்னை இசைவிழா

# சர்ச்சைகளும் சிந்தனைகளும்

சென்னையில் ஆண்டுதோறும் நடைபெறும் டிசம்பர் சங்கீத சீஸன் பழைய சங்கீத வித்வான்களுக்கு பட்டமளித்து அவர்களுடைய தொண்டை கௌரவிக்கும் விழாவாகவும், ரஸிகப் பிரமுகர்கள் தங்கள் சொந்த அபிப்பிராயங்களை வெளியிட்டு இசையோடு சம்பந்தமான சர்ச்சைகளை எழுப்பிவிடும் கருத்தரங்கமாகவும், முன்னுக்குவர முயலும் இளம் வித்வான்கள் தங்கள் திறமையைக் காட்டி பொதுமக்களின் ஆதரவைப் பெறுவதற்கு ஓர் அரிய சந்தர்ப்பமாகவும், ரஸிகப் பெருமக்கள் தங்கள் இசைத்தாகத்தை தணித்து கர்நாடக சங்கீதத்தின் தனிப் பெருமையை நினைவூட்டிக்கொள்ளும் ஒரு களிபெரும் கலை விழாவாகவும் திகழ்கின்றது.

### குரற்பயிற்சி

தமிழிசைச் சங்கம் இம்முறை 'சீனியர்' வித்வான் செம்மங்குடி ஸ்ரீனிவாஸ ஐயரை தலைமைக்கு அழைத்து அவருக்கு 'இசைப் பேரறிஞர்' என்ற பட்டத்தை வழங்கியது. செம்மங்குடியார் தமது தலைமையுரையில், இசையோடு சம்பந்தமுள்ள எல்லோரும் கவனிக்கத்தக்க இரண்டொரு புதிய கருத்துக்களை வெளியிட்டார். சங்கீதம் பயிலுவதில் குரலுக்கு அப்பியாசம் கொடுப்பது மிகவும் அவசியமானதென்று அவர் கூறியது ஒரு புதுமையான கருத்து, இது வரை காலம் நம்மவர்கள் 'குரற்பயிற்சி' என்பதை கேள்விப்பட்டிருக்கவே மாட்டார்கள். ஐண்டை வரிசைகளையும் அலங்காரங்களையும் அகார சாதகம் செய்வதும் விடியற்காலை எழுந்திருந்து மூன்று நான்கு மணி நேரம் தொண்டை கிழியக் கத்துவதும் குரற்பயிற்சியல்ல. குரலை வளம் படுத்துவதற்கு முறையான சில அப்பியாசங்கள் இருக்கின்றன. மேனுடுகளில் முதலில் குரற்பயிற்சி அளித்த பின்புதான் சங்கீத அரிச்சுவடி கற்பிப்பார்கள், எல்லோருக்கும் ஒரேவிதமான சாரீரம் அமைவதில்லை. ஆண்களில் சிலருக்கு அரைக்கட்டை ஒரு கட்டை சுருதியில் பாடுவதற்கும், சிலருக்கு நாலு நாலரை கட்டையில் பாடுவதற்கும் ஏற்றவாறு குரல்வளை இயற்கையாக அமைந்திருக்கிறது. இந்த வேறுபாட்டைக் கவனித்து அதற்கேற்றவாறு குரற் பயிற்சி அளித்தால் அந்த சாரீரம் நயமாக இருக்கும். மேனுட்டார் இந்த வேறுபாடுகளை அவதானித்து ஆண் குரல்

சில பெரிய வித்வான்கள் பாடும்போதும் சாரீரம் இடக்குப் பண்ணுவதையும் அபஸ்வரம் விழுவதையும் காண்கிறேம். இக்காலத்தில் பலரும் சினிமாப்பாட்டுகளை விரும்புவதற்கு ஒரு காரணம் பாடுவோரின் இனிமையான சுருதிப் பிடிப்பான குரலே என்பதை மறந்துவிடப்படாது முறையான குரற்பயிற்சி செய்தால் எல்லோருக்குமே இப்படி இனிய சாரீரம் வாய்க்கும் என்பது நிச்சயம்.

செம்மங்குடியார் கூறிய இந்த அருமையான யோசனையை இசைக் கல்லூரிகளும், சபைகளும், இசை மாணவர்களும் பின்பற்றி மேனுட்டு குரற்பயிற்சி முறைகளை இங்கேயும் அனுஷ்டிப்பது மிகவும் நல்லதாகும்.

### கலைஞர்கள் வயிறு காயலாமா?

'இசையை நன்கு பயின்று தேர்ந்த கலைஞர்கள், ஓதுவார்கள், நாகசுரவித்வான்கள் வயிறு காய்ந்தால் அவர்கள் கலையை விருத்திசெய்து கொள்வது சாத்தியமாகுமா?' என்று உருக்கமாக வேண்டுகோள் விடுத்த ஸ்ரீனிவாச ஐயர், ஓரளவு வயது முதிர்ந்தவர்களாய் வருவாய் இல்லாமல் கஷ்டப்படும் கலைஞர்களுக்கு அரசாங்கம் ஆயுள் பென்ஷன் கொடுத்து அவர்களை ரட்சிக்க வேண்டுமென்றும் கேட்டிருக்கிறர்.

இதுபற்றி இரண்டு வித அபிப்பிராயங்களுக்கு இடமேயில்லை. தேகவலிவும் சுறுசுறுப்பும் இருந்த காலத்தில் இளம் கலைஞர்களைத் புகழும் பணமும்தேடி வரும் வலிமை குன்றிவயோதிபம் வந்துவிட்டால் அவர்களை தேடுவார்அரிது ஆயுள் முழுவதும் கலைக்காகதொண்டாற்றிவிட்டு தள்ளாத வயதில் ஒருநேரச் சோற்றுக்கு வழியில்லாமல் திண்டாடும் எத்தனையோ கலைஞர்களைக் காண்கிறேம். இசை வானத்தில் அவர்கள் ஜொலிக்கும் வரை நிறைய அள்ளிக்கொடுக்கத் தயாராயிருந்த பொதுமக்கள் பிரகாசம் சற்று குறைந்ததும் அவர்களை மறந்துபோய் விடுவார்கள். ஆதலால் இக்கலைஞர்களுக்கு ... அரசாங்கமே கடமைப்பட்

போதுமா? அவர்கள் ஒன்றுகூடி சிருஷ்டிக்கும் அந்த 'வியாதி'யை வீடுகள்தோறும், ஹோட்டல்கள்தோறும் வீதிகள்தோறும் பரப்பி முழங்குவது ரேடியோவல்லவா? ஆகையால் முதலில் ரேடியோக்காரர் மனம்வைக்க வேண்டும். தனிப்பட்டவர்களாகிய படத்தயாரிப்பாளர்களுக்கு பண வசூல் ஒன்றே குறிக்கோள். ரேடியோநிலையங்களோ இந்தியாவிலும் இலங்கையிலும் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்குள்ளவை. பொதுமக்களுடைய ரஸனையை ஓர் உயர்ந்த நிலையில் வைத்திருக்கவேண்டியது அவற்றின் பொறுப்பும் கடமையுமாகும். ஆதலால் இவர்களே இந்த தொற்று நோய்க்கு தடைபோட வல்லவர்கள்.

### மாதாந்தக் சேரிகள்

மியூசிக் அகடமி மகாநாட்டை திறந்து வைத்த திரு டி எஸ் ராஜம் கூறிய யோசனை பழையதாயிருந்தாலும் மீண்டும் மீண்டும் தெரிவித்து வற்புறுத்த வேண்டிய தொன்று வருடத்தில் பதினைந்து நாட்களுக்குமட்டும்இசைவிழா நடத்திவிட்டால் இளம் வித்துவான்கள் தங்கள் புலமையைக் காட்ட போதிய சந்தர்ப்பம் கிடையாதென்றும், மாதம் ஒருமுறையாவது ஒருரூபாய் அல்லது அதற்கும் குறைந்த கட்டணம் வைத்து திறம் வித்துவான்களுக்கு கச்சேரி செய்யும் வாய்ப்பு அளிக்க வேண்டுமென்றும் அவர் கேட்டுக் கொண்டார். சென்ற வருடம் மகாநாட்டுக்கு தலைமை வகித்த ஸ்ரீமதி எம். எஸ் சுப்புலட்சுமியும் இதே யோசனையை வற்புறுத்தியிருந்தார்.

இந்தயோசனை இலங்கைக்கு மிகமிகப் பொருத்தமானதாகும். ஆண்டு தோறும் பல இளம் பெண்களும் ஆண்களும் இந்தியாவில் சங்கீதம் கற்று பட்டத்தோடு திரும்புகிறர்கள் இங்கு வந்ததும் தாம் கற்றுக் கொண்ட கலையை பிறருக்கு காண்பித்து அவர்களுடையபாராட்டைப் பெற விழைகிறர்கள். ஆனல் அதற்குத் தக்க சந்தர்ப்பங்கள் இ...

கலையை மேற்கொண்டு விருத்திசெய்ய எவ்விதமான தூண்டுகோலுமில்லை. கச்சேரிகள் மூலம் பணவருவாயுமில்லை, கலையைமதிப்பாருமில்லை, இந்த நிலையில் திறம் வித்துவான்கள் எப்படி முன்னேற முடியும்? நாட்டின் பல பாகங்களிலும் தோன்றியிருக்கும் சங்கீத சபைகளும் சங்கீதாபிமானிகளும் இந்த விஷயத்துக்கு பிரதானத்துவம் அளிக்க வேண்டியது அவசியம்.

### பக்தியும் இசையும்

தமிழிசைவிழாவை ஆரம்பித்து வைத்த தமிழக மந்திரி திரு கே.ஏ. மதியழகன் ஒரு புரட்சிகரமான கருத்தை வெளியிட்டு சங்கீத உலகத்தில் சிறு பரபரப்பை உண்டாக்கி விட்டார். தமிழிசைப்பாடல்கள் எல்லாம் 'பக்தி' ஒன்றையே அடிப்படையாகக் கொண்டவை என்றும் இனிமேல் தமிழிசை வளர்வதற்கு இசைப்புலவர்கள் தமிழர் பண்பாடு, விவசாயம், சமூகம் இயற்கை முதலிய விஷயங்களைப் பற்றியும் பாடல் இசைக்க வேண்டுமென்றும் அவர் சொன்னுர்.

## [வி. என். பி.]

இசையும் பக்தியும் ஒன்றிப் பிணைந்தவை. ஒன்றில்லாமல் மற்றென்றில்லை நாதோபாஸனையால் இறைவனை அடையலாமென்பது சங்கீதம் புலவர்களுடைய திடமான அபிப்பிராயம் பக்தியில்லாத பாடல்கள் நல்ல சங்கீதமாவதில்லை. இதுகர்நாடக சங்கீதத்தின் தனித்துவம்.

நமது சினிமா பாடல்களில் நூற்றுக்கு தொண்ணூற்றென்பதும் ஒ விதமான 'பக்தி' அடிப்படையிலேயே இருக்கின்றன. ஆண், பெண் பக்தி! மந்திரியவர்கள் சொன்ன விஷயங்களை சினிமா பாடல்களில் தாராளமாக புகுத்தலாமல்லவா? யாரும் ஆட்சேபிக்க மாட்டார்கள். சுத்த சங்கீதத்துக்கு அவை ஒத்து வருமோ என்பது சந்தேகம்.

# ஐயாறன் எழுதுவது..

நான்கு நாட்கள் தொடர்ந்து மழை பெய்தபின் நேற்றுக்காலை யாழ்ப்பாணத்திலே சூரியன் சற்றே வெளிவந்தான். புதுவருடத்துக்கு நம்பிக்கை உதயமாவதுபோல் இதுநல்ல சுபசகுனமாக இருந்தது. சுமார் இரண்டுமணிநேரம் இளம் வெயில் அடித்தபின் மீண்டும் மழை பிடித்துக்கொண்டது.

மழைவேண்டியது தான். ஆனுல் மிதமிஞ்சிப் பொழிவதாயின் ஏழைகளுக்குத்தான் மிகவும் சங்கடம். பல குடிசைகளிலும், வீடுகளிலும் வெள்ளம் புகுந்து விட்டதாயும், இரவெல்லாம், கட்டில், பெட்டி இவைமீது குழந்தை குட்டிகளுடன் கவலையுடன் தூக்கமின்றி கழித்ததாயும் ஓர் ஏழைத் தொழிலாளி கவலையுடன் தெரிவித்தார். இவரைப்போல் இன்னும் எவ்வளவு பேர் சங்கடப்படுகிறர்களோ!

கிளிநொச்சி, வட்டக்கச்சி, உருத்திரபுரம்முதலிய பகுதிகளில் வெள்ளம் பெருகி சுமார் 300 குடும்பங்களுக்குமேல் தவித்ததாயும் கடற்படைப்படகுகளில் அவர்களை ஏற்றிக் காப்பாற்றியதாயும் அவர்களது உணவுக்காக ஒழுங்கு செய்துள்ளதாகவும், யாழ்ப்பாண அரசாங்க அதிபர் மூலம் அறிந்தேன்.

இயற்கை அன்னை இவ்விதம் சோதனை செய்கையில் அதை எவ்விதம் தடுக்க முடியும்? சங்கடப்படும் மக்களுக்கு அரசாங்கம் ஒருபுறம் உதவிசெய்தாலும், வசதியுள்ள மக்கள் ஆங்காங்கே கூடுமான உபகாரத்தைச் செய்யவேண்டியது பெரிய கடமையாகும். இவ்விதம் உதவி செய்து நல்ல புண்ணியத்தைப்பெற இதுபோன்ற சமயத்தை இழக்கக்கூடாது.

0 0 0

யாழ்ப்பாணம் ஒரு பாலைவனமாகிவிடக்கூடுமென்று ஒரு வெளிநாட்டு நிபுணர் பயமுறுத்தியதைப் பற்றி அரசாங்க அதிபரிடம் கூறி, இவ்வளவு மழை பொழியும் யாழ்ப்பாணம் பாலைவனமாகுமா என்று கேட்டேன்.

அவர் சிரித்துவிட்டு, பேப்பர்காரர்தான் நிபுணர் கூறியதை மிகைப்படுத்திவிட்டதென்றர். இங்கு பூமிக்கடியிலுள்ள நீரை, விவசாயத்துக்காக வர வர அதிகம் பயன்படுத்தினுல், அந்தத்தண்ணீர் வற்றுவதுடன், உவர்ப்பு அதிகரித்துவிடுமென்றும் இதைப்பற்றி கவனயாக இருக்கவேண்டுமென்றுதான் இஸ்ரேல் நிபுணர் கூறியதாகத் தெரிவித்தார். எப்படியும், யாழ்ப்பாணம் பாலைவனமாகாதாயின் அது மகிழ்ச்சிக்குரியதே.

சென்ற பத்து வருடங்களில் மழையின்றி வரட்சி ஏற்பட்டிருந்ததாயும் அடுத்த பத்து வருடங்களுக்கு மழை குறையாமலிருக்குமென்றும், இப்போதைய மழை அதற்கு நல்ல அறிகுறியென்றும் சொல்லப்படுகிறது. அளவுக்கு மிஞ்சி அதிக மழை பொழியாமல், மக்களுக்குக்கஷ்ட நஷ்டங்கள் விளைவிக்காமல் இருக்கவேண்டும்.

வெள்ளமோ, பூகம்பமோ வருவதாயின், அது ஆண்டவன் நமக்கு அளிக்கும் தண்டனையாகுமென்றும் மகாத்மா கூறுவதுண்டு. அப்படிப் பார்க்கையில், இலங்கையிலே இப்போது ஏற்பட்டுள்ள வெள்ளமும் நாம் செய்த ஏதோ ஒரு குற்றத்துக்கான தண்டனையே என்றகும். நம்மில் பலரும் ஆத்மசோதனை செய்து நமது குற்றத்தை உணர்ந்து, அதைத்திருத்திக் கொள்வது நல்லதல்லவா?

0 0 0

மனிதர்காள் இங்கே வம்மொன்று சொல்லுகேன், கனி தந்தாற் கனியுண்ணவும் வல்லிரே, புனிதன் பொற்கழல் ஈசனெனும் கனி, இனிது சாலவுமே சற்ற வர்கட்கே.

—அப்பர் அடிகள்.

# அமைச்சர் அடுத்தமாதம் அடிக்கல் நாட்டுவார்

யாழ்ப்பாணம், வெள்ளி ... சுகாதார அமைச்சருடன்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

நிற்போர் பலர்.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உடனடியாக செய்யவேண்டிய உதவி அவர்களுக்கு உணவும், உடையும் தங்குவதற்கு வசதியும் செய்துகொடுக்க வேண்டியதுமாகும் அரசாங்கமும் அரசாங்க அதிகாரிகளும் ஊழியர்களும் நிவாரண உதவி வழங்கிவருகின்றனர் என்பதும் கஷ்டப்படும் மக்களுக்கு உதவி செய்துவருகின்றனரென்பதும் உண்மையே. செஞ்சிலுவைச் சங்கம், பௌத்த காங்கிரஸ் மற்றும் பொது ஸ்தாபனங்களும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிசெய்யமுன் வந்துள்ளன. வெளிநாட்டு அரசாங்கங்கள் சிலவும் பொருளாதார உதவியளிக்க முன்வந்திருக்கின்றன. மக்கள் அவர்கள் எந்நாட்டவராயினும் எப்பகுதியினராயினும் கஷ்டப்படும்போது, வேற்றுமைகள் யாவையும் ஒதுக்கிவைத்துவிட்டு உதவிக்குச் செல்வது மனிதப் பண்பு. இந்தப் பண்பு இலங்கை மக்களிடம் இல்லாததல்ல. அரசாங்கமும் பொதுஸ்தாபனங்களும் மட்டுமல்ல. பொதுமக்கள், வெள்ளத்தால் பாதிக்கப்

படும் நிகழ்ச்சி ஏதாள். ஆறுகள், நதிகள் பெருக்கெடுப்பதும் தாழ்ந்தபகுதிகள் வெள்ளத்தினால் அமிழ்வதும் வீதிகளில் வெள்ளம் பாய்ந்து போக்குவரத்துக்கள் தடைப்படுவதும் இங்கு நடைபெறும் சம்பவங்கள். இவற்றை முற்றாகத் தடுக்க முடியாவிடினும், இந்த முறையாவது வெள்ளம் வடிந்தபின்னர், பாதைகளில் அவசியமான இடங்களில் பாலங்கள் கட்டியும், குளங்களை ஆழமாக்கியும் பெருப்பித்தும் . கால்வாய்களை உருவாக்கியும் வடிகால்வாய்த் திட்டங்களைச் சீராக்கியும் திட்டமிட்ட சில நடவடிக்கைகளை எடுத்தால் வெள்ளத்தினால் அடிக்கடி ஏற்படும் பெரும் சேதங்களை ஓரளவாவது குறைத்துக் கொள்ள வழிபிறக்கலாம் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு பெருஞ்சேதம் ஏற்பட்டதும் உதவிசெய்ய முன்வரும் நாடுகளிடமும் இதர நாடுகளிடமும்கூட இங்கு வெள்ளப்பெருக்கு ஏற்படாமல், வடி கால்வாய்த்திட்டம் அமைப்பதற்கு உதவிகோரலாம். நீர்ப்பாசனஅமைச்சு இதுபற்றிக் கவனஞ்செலுத்துவது நல்லது.

பாட்டைக் கவனித்து அதற்கேற்றவாறு குரற் பயிற்சி அளித்தால் அந்த சாரீரம் நயமாக இருக்கும். மேனாட்டார் இந்த வேறுபாடுகளை அவதானித்து ஆண் குரல்களை ‘பாஸ்’, ‘பாரிடோன்’, ‘ரெனர்’, முதலாகவும் பெண்குரல்களை ‘கொன்ட்ருல்டோ’, ‘ஸொப்ருனோ’, எனவும் வகை வகையாகப் பிரித்திருக்கிறார்கள். குரல் பயிற்சிக்கென்று அங்கே தனிப்பட்ட பள்ளிக்கூடங்களும் இருக்கின்றன.

சரியான குரல்பயிற்சி இல்லாத காரணத்தினால் தான்

பொதுமக்கள் பிரகாசம் சற்று குறைந்ததும் அவர்களை மறந்துபோய் விடுவார்கள். ஆதாரமற்ற இக்கலைஞர்களுக்கு உதவி அளிக்க அரசாங்கமே கடமைப்பட்டுள்ளது.

### ஆழம் குறைந்த சங்கீதம்

கர்நாடக சங்கீதத்தின் தரம் குறைந்து வருகிறதென்று தம்மைப்போலவே பலர்வருந்துகிறார்கள் என்று இந்திய நுண்கலைக் கழகத்தின் சங்கீத மகாநாட்டுக்கு தலைமை வகித்த திரு பாபநாசம் சிவன் கூறியதோடு விடாமல், தொடர்ந்து ‘இலந்தைப்பழம், நாவற்பழம், முலாம்பழம் என்று நூறுவகைப் பழங்கள் சந்தைக்கு வந்தாலும், மா, பலா, வாழை என்ற முப்பழங்களின் சுவையை ஒன்றாலும் அசைக்க முடியாது’ என்று நைஸாக ஒரு சங்கதி வைத்தார்!

திரு. சிவன் இருபதாம் நூற்றாண்டின் தலைசிறந்த சங்கீத-சாகித்திய கர்த்தா என்பதை எவரும் மறுக்க முடியாது. அவர் இயற்றிய நூற்றுக்கணக்கான தமிழ் கீர்த்தனைகள் கவிநயத்திலும் மெட்டு இனிமையிலும் திரிமூர்த்திகளின் படைப்புகளுக்கும் ஈடானவை என்று தைரியமாகக் கூறலாம். சினிமா என்பது தமிழுலகத்தில் பிரவேசித்த ஆரம்ப நாட்களில் திரு. சிவனே அவற்றிற்கு பாடல்கள் எழுதினார். அவற்றின் மெட்டுகளையும் அவரே தயாரித்தார். இப்பொழுதுபோல ஒருவர் மெட்டு அமைக்க இன்னொருவர் அதற்கேற்றாற்போல வார்த்தைகளை புகுத்தியதல்ல. சிவன் அவர்கள் சினிமாவுக்கென்று எழுதிய பாடல்கள் அனைத்துமே தூய கர்நாடக இசையை ஒட்டியவை. அவற்றுள் பல இசைக்கச்சேரிகளில் பாடத்தக்கனவாயிருந்தும் ‘சினிமாப் பாட்டு’ என்ற கறை பிடித்துவிட்டபடியால் வித்வான்கள் அவற்றை குலப்பிரஷ்டம் செய்து வைத்திருப்பது மிகவும் வருந்தத்தக்கது.

காலையில் துயில்நீங்கி எழுந்தவுடன் “ஐயையோ, அப்பப்பா’ என்ற அலறலை ரேடியோவில் கேட்கவேண்டியிருக்கிறதே என்று வருந்திய திரு. சிவன் ‘படாதிபதிகள், சங்கீத டைரக்டர்கள், நடிகர்கள் மனம்வைத்தால் இந்த வியாதி தீர்ந்துவிடும் என்று கூறும்போது அவர் மனம் என்னபாடுபடுகின்றதென்பதை நாம் ஒருவாறு ஊகித்துக்கொள்ளலாம்.

ஆனால் இவர்கள் மனம் வைத்தால் மட்டும்

திரும்புகிறார்கள் இ... வந்ததும் தாம் கற்றுக் கொண்ட கலையை பிறருக்கு காண்பித்து அவர்களுடையபாராட்டைப் பெற விழைகிறார்கள். ஆனால் அதற்குத் தக்க சந்தர்ப்பங்கள் கிடைப்பது அபூர்வம். கட்டணம் வசூலித்து சங்கீதக் கச்சேரி செய்யும் வழக்கமே இன்னும் இலங்கையில் ஏற்படவில்லை நாட்செல்ல அவர்களுடைய உற்சாகம் குன்றி உணர்ச்சிகள் மரத்துப்போய் விரக்தி ஏற்பட்டு விடுகிறது. கற்ற

சினிமா பாடல்களில் தாராளமாக புகுத்தலாமல்லவா? யாரும் ஆட்சேபிக்க மாட்டார்கள். சுத்த சங்கீதத்துக்கு அவை ஒத்து வருமோ என்பது சந்தேகம்.

இதுபற்றி சென்னை ஆங்கில தினசரி ஒன்றில் விமர்சனம்செய்தஒருவர் ‘நல்லவேளையாக மந்திரியவர்கள் சென்னை கடற்கரையை (மரீனா) மறந்து விட்டார்’ என்று கிண்டலாக எழுதியிருந்தார்.

## குடிசைத் தொழில் வளர்ச்சிக்கு உழைத்த பெருமகன்

யாழ்ப்பாணத்துக்கோவையூர் பண்டைக்காலம்தொட்டுக் கலைவளர்த்த பேரறிஞர்களைக் கொண்ட பெருமையுடையது. தென்கோவை உயர்திரு மு. சுவாமிநாதனும் அம் பேரறிஞர்களுள் ஒருவராவர்.

திரு. சுவாமிநாதன் கோப்பாயில் மாத்திரமன்றி ஈழவளநாடு முழுவதிலுமே கலைப்பணி புரிய வேண்டுமென்ற பேராவல்பூண்ட பெருந்தகையாவர். குடிசைக் கைத்தொழிற் கலையை நாடெங்கும் பரப்பி உள்ளூர் உற்பத்தியை விருத்தி செய்ய வேண்டுமென்பது அவரது பரந்த இலட்சியமாகும்.

யாழ்ப்பாணக் கற்பகதருவான பனை மரத்தின் ஓலையிலிருந்து செய்யப்படும் பன்னவேலை குடிசைக் கைத்தொழிலின் அபிவிருத்தியில் அவர் கருத்தூன்றி நின்றார். தென் இலங்கையில் உதவி அரசாங்க அதிபராகஇருந்த திரு. சி. வி. பிறெயினின் விடாமுயற்சியால் விருத்தி அடைந்துகொண்டிருந்த பன்னவேலைகளையும்பயிற்சிக் கூடங்களையும் உற்றுநோக்கினார்.

1927-ம் ஆண்டில் தனது முகாமையின் கீழ் உள்ள கோப்பாய் இந்துதமிழ்க்கலவன் பாடசாலையில் ஒரு பன்னவேலை ஆசிரியரை நியமித்தார். யாழ்ப்பாணத்தில் முதன்முதல் பன்ன ஆசிரியரை நியமித்தவர் சுவாமிநாதனே ஆவர். சிறிதுகாலத்தின் பின் அந்தப் பன்ன ஆசிரியரை களுத்துறை மாவட்டத்தில் உள்ள பயிற்சிக்கூடம் ஒன்றிற்கு அனுப்பித் தென் இலங்கையில் செய்யப்படும் ஓலை வேலைகளையும் பயிற்றுவித்து அவைகளையும் தமது வித்தியாசாலையில் பயிற்றுவித்து தமதுஇலட்சியத்தின் முதற்படியை ஆரம்பித்தார்.

பின்னர் கைப்பணிப் பாடத்தின் முக்கியத்துவத்தையும் பன்னவேலையின் மகத்துவத்தையும் அயலிலுள்ள கோப்பாய் கிறீஸ்தவ கல்லூரி அதிபர்செல்வி ஹட்சன் அம்மாவுக்கும் எடுத்துக்காட்டி பாடசாலையிலும் பன்னவேலைப்பாடத்தைப் புகுத்துவித்துவெற்றி கண்டார் தனது பாடசாலையிலும் அயற்பாடசாலையிலும் பன்னவேலைப் பயிற்சி முடிந்து வெளியேறும்மாணவியர்களுக்கு வேலைவசதியளிக்கும் பணியிலும் அயராது கல்விப் பகுதியாருடன் தொடர்புகொண்டு வாதாடி நூற்றுக்கணக்கான பெண் பிள்ளைகளைக் கைப்பணிஆசிரியைகளாக பதவியும்பதிவும் பெற்றுக் கொடுத்தார். இன்னும் நாட்டின் பல பாகங்களிலும் அவர்கள் கைப்பணி ஆசிரியர்களாகக் கடமையாற்றி விளங்கி வருகின்றனர்.

திரு. சுவாமிநாதன் 1944-ம் வருடம் கைத்தொழில் அதிபராயிருந்த டி.எச். பல்பூரையும் மந்திரி கொறியாவையும் அடிக்கடி வற்புறுத்தியும், வாதாடியும் லுநுவில மாவட்டத்தில் கிரிமெற்றியானா என்னுமிடத்தில் கைப்பணி ஆசிரியபயிற்சிக் கல்லூரியை திறப்பித்து வைத்தார் இப் பயிற்சிக்கூடத்தில் நமது யாழ்ப்பாணப் பெண்பிள்ளைகளும் பலர் பயிற்சிபெற வழி வகுத்து முன்னின்று உழைத்தார்.

யாழ்ப்பாணத்திலும் கைப்பணி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை ஒன்று உருவாக்கப்படவேண்டுமென்பதில் திரு சுவாமிநாதன் மிக்க ஊக்கத்துடன் உழைத்தார்.

அதன்பயனாக 1952-ம் வருடம் கோப்பாயில் ஒரு பயிற்சிக்கலாசாலை திறக்கப்பட்டது. சகல கைப்பணிப் பயிற்சிகளையும் ஒரே ஒரு பயிற்சிக் கலாசாலையாக இலங்கையில் விளங்கி வந்தது இக் கலாசாலை. இங்கிருந்து அகில இலங்கை ரீதியாக மாணவியர் பயிற்சி பெற்று வெளியேறினர். துரதிர்ஷ்ட வசமாக கைப்பணி ஆசிரிய நியமனங்களை அரசாங்கம் நிறுத்திக்கொண்டதால் இக்கலாசாலை 64-ம் ஆண்டு மூடப்பட்டது.

மறுபடியும் இந்தப் பாடசாலைக்கு புத்துயிர் அளிக்க திரு சுவாமிநாதன் தம்மாலான பல முயற்சிகளில் ஈடுபட்டு உழைத்து வந்தார். எனினும் தனது ஆசைநிறைவேறாமலே அவர் அமரராகி விட்டார். அவர் சிராத்த தினமான இன்று அவர்விட்டுச் சென்ற பணிகளைத் தொடர்ந்து செய்வதே அவரது ஆத்மா சாந்தியடைய நாம் செலுத்தும் அஞ்சலியாகும்.

திருமதி வ. குழந்தைவேலு

## பிரதமர் பார்த்தார்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பெருவெள்ளம் ஏற்பட்டுள்ள மாத்தறை, அம்பாந்தோட்டைப் பகுதிகளைப் பிரதமர் திரு டட்லி சேனநாயக்கா இன்று காலைவிமானத்தில் சென்று பார்வையிட்டார். இதன்பின் அம்பாந்தோட்டை, மாத்தறை மாவட்ட அரசாங்க அதிபர்களுடன் வெள்ளச்சேதம்பற்றியும் மேற்கொண்டு அளிக்க வேண்டிய உதவிகள பற்றியும் ஆலோசனை செய்தார்.

வீதிகளுக்கு ஏற்பட்டுள்ள சேதங்கள பற்றியும் அவற்றைத் திருத்துவதற்கு ஏற்படக்கூடிய செலவுகள் பற்றியும் மதிப்பீடு செய்வதற்கு வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட அகதிகளுக்கு மராமத்து அமைச்சின் அதிகாரிகள் குழுக்கள் சென்றுள்ளன. அம்பாம் தோட்டப்பகுதியில் மட்டும் 98 சதவிகிதமான வீதிகள் சேதமடைந்துள்ளன.

## பிரதமர் கவலை

கோட்டை, வியாழன்

வெள்ளத்தால் ஏற்பட்டுள்ள விளைவுகள் குறித்து பிரதமர் திரு. டட்லி சேனநாயகா கவலைதெரிவித்துள்ளார். அவதியுறுபவர்களுக்கு உடனடியான நிவாரணம் வழங்குமாறு அவர் சகல அரசாங்க அதிபர்களையும் கேட்டுள்ளார்.

தேசிய வீரர் தினத்தையொட்டி இன்று மாலை கொழும்பில் நடைபெற்ற திரு. எப். ஆர். சேனநாயகாவின்ஞாபகார்த்த தினக் கூட்டத்தில் கலந்துபேசுகையிலேயே பிரதமர் மேற்கண்டவேண்டுகோளை விடுத்தார்.

வெள்ளத்தால் ஏற்பட்டுள்ள சேதங்குறித்து கவலை தெரிவித்த அவர்நிவாரண உதவிகள் உடனடியாக வழங்க எல்லா நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளதென்று குறிப்பிட்டு நிவாரண வேலைகளில் ஈடுபட்டுள்ள அரசாங்க ஊழியர்களுக்கும் முப்படை வீரர்களுக்கும் தமதுபாராட்டை தெரிவித்தார்.

## மாண்டவர் தொகை 22

மண் சரிவினாலும் வெள்ளத்தினாலும்இதுவரை 22பேர்தான் மாண்டனரென்று அரசாங்க அதிகாரியொருவர் தெரிவித்தார்.உடவளவைத் திட்டத்தில் எவரும் உயிர் நீங்கவில்லையென்றும் அவர் சொன்னார்.

பாதிக்கப்பட்டபகுதிகளுக்குத்தேவையானமருந்துகளை கொடுத்துதவுமாறு தனிப்பட்ட மருந்து விற்பனையாளர்களையும் வைத்தியர்களையும் சுகாதார சேவை இலாகா கோரியுள்ளது.

வவனியா, மாத்தறை மாவட்டங்களில் சிறு குளங்கள் மட்டுமே உடைப்பெடுத்திருப்பதாகவும் நாட்டிலுள்ள பெரிய குளங்கள் எதுவும் உடைப்பெடுக்கவில்லையென்றும் நீர்ப்பாசன இலாகாவினர் தெரிவித்தனர்.

## 150 ஆடுகள் மாண்டன

பூநகரி, வியாழன்

பூநகரி கென்னியாதீவு, தம்பிராய் உட்படப் பல கிராமங்கள் வெள்ளத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. வெள்ள அகதிகளைக்காப்பாற்றுவதற்காக காரைநகர் கடற்படையினருக்குச்சொந்தமான படகுகள் இங்கு வருவிக்கப்பட்டுள்ளன.

இங்குள்ள குடம் உருட்டிக்குளத்தில் 4 அடி தண்ணீர் பாய்கிறது. பூநகரிக் காரியாதிகாரி திரு. எம். இராசரத்தினம் உணவுப் பண்டங்களை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நேரிற் கொண்டு சென்று வழங்கினார்.

தம்பிராய் என்னுமிடத்தில் தனிப்பட்டவர்களுக்குச்சொந்தமான150ஆடுகள் இறந்து வெள்ளத்தில் மிதந்து காணப்பட்டன. அனேக வீடுகள் வெள்ளத்தில் மூழ்கிவிட்டன. பாடசாலைகளில் மக்கள் தஞ்சம் புகுந்துள்ளனர்.

மழைநேரத்தில்பனை மரத்தில் ஏறிய சீவல்தொழிலாளி ஒருவர் தவறி விழுந்து படுகாயமுற்றார். கென்னியாதீவைச்சேர்ந்த சின்னப்பு என்பவரது நிலைமை படுமோசமாகயிருக்கிறதாம்.

## அமைச்சர் அடுத்தமாதம் அடிக்கல் நாட்டுவார்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி புதிய வெளிநோயாளர் சிகிச்சை நிலையத்திற்கான அத்திபாரக்கல்லை சுகாதார அமைச்சர் திரு. ஈ. எல். சேனநாயகா அடுத்த மாதம் நாட்டிவைக்கவிருக்கின்றார்.

அனலைதீவில் புதிய ஆஸ்பத்திரியை திறந்துவைக்கவென இங்குவரும் அமைச்சர் மின்சார நிலையக்காணியில் நிறுவப்படவிருக்கும் இரண்டு மாடி வெளிநோயாளர் சிகிச்சை நிலையத்திற்கும் அத்திபாரக்கல் நாட்டுவார்.

யாழ். ஆஸ்பத்திரியில் நிலவும் டாக்டர்கள், தாதிகள் பற்றாக்குறை பற்றி ஆஸ்பத்திரிச் சபை நேற்றுமுன்தினம் சுகாதார அமைச்சுக்கு மகஜர் ஒன்றை அனுப்பி வைத்தது. இது பற்றியும் சுகாதார அமைச்சருடன் இங்குள்ள அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்துவார்கள்.

தெல்லிப்பளையில் நிறுவப்பட்டிருக்கும் காங்கேசன்துறை புதிய ஆஸ்பத்திரியையும் சுகாதார அமைச்சரே திறந்துவைப்பார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (கா. நி.)

## புதிய மாஜிஸ்திரேட்

யாழ்ப்பாணம், வெள்ளி

பாணந்துறை மாஜிஸ்ரேட்டாகக் கடமையாற்றிய திரு. ஜே. எப். டயஸ் இன்று காலை யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட்டாக கடமையேற்கிறார்.

## சென்னை இசைவிழா

### இன்றைய நிகழ்ச்சிகள்

சென்னையில் நடைபெற்றுவரும் இசைவிழாவில் இந்திய நுண்கலைச் சங்கத்தின் ஆதரவில் இன்று வாணிமகாலில் இடம்பெறும் நிகழ்ச்சிகள் வருமாறு:-

பி ப 3-30 ஆர் ருக்குமணி பாட்டு, திண்டுக்கல் சேதுராமன் வயலின், கும்பகோணம் ராஜப்பா மிருதங்கம்.

பி. ப. 5- 00 சதஸ், 7-00 குமாரி சசிகலா பரத நாட்டியமும் அபிநயமும் 9 30 பாபநாசம் விஜயலட்சுமி பாட்டு. ரி.டி. சங்கரஐயர் வயலின், நாகூர் அம்பிஐயர் மிருதங்கம், நாதமுரளி கிருஷ்ண காஞ்சிரா.

(இமை- நி)

## இன்றிரவு

யாழ்ப்பாணம், வெள்ளி

பாம்புக்கடி பற்றிய உரையாடல் ஒன்று இன்றிரவு 9-30 மணிமுதல் 10 மணி வரை இலங்கை வானொலியில் நடைபெறும் பாம்புக்கடி சிகிச்சை நிபுணர்கள் கே. சிற்றம்பலமும், டாக்டர் திருநாவுக்கரசுவும் இதனை நிகழ்த்துவர்.

## ‘தீண்டாமை ஒழிய வழி’

மாவிட்டபுரம், வெள்ளி

‘சிறுபான்மைத் தமிழர்கள் அரசியல் பொருளாதார பிரதிநிதித்துவம் பெற்று சமத்துவமாக வாழ்ந்தால் தான் தீண்டாமை ஒழியுமே தவிர ஆலயத்தில் பிரவேசிப்பதனால் மட்டும் தீண்டாமை ஒழியமாட்டாது. ஆலயத்தில் பிரவேசிக்க முயல்வதற்கு முன்னர் அரசியல், பொருளாதார சுதந்திரம் எமக்குத்தேவை.’

இவ்வாறு சிறுபான்மைத் தமிழர் நலன் அபிவிருத்தி இயக்கத் தலைவர் திரு எஸ் சுந்தரம் தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில் நடந்த மகாநாட்டில் கலந்து கொண்டு பேசுகையில் கூறினார்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு ஜனவரி மாதம் 2-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org